பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 11 | செவ்வாய்க்கிழமை 27.11.2018 | கதிர் 22

**இது ரகசியம் அல்ல!**

பெயர்தான் கைத்தொலைபேசி. ஆனால் 'ஸ்மார்ட் போன்கள்' என்றால் தொலைபேசியில் தொடங்கி, கமரா, இணையத்தளம், இன்ரநெற் என்று இத்யாதி எல்லாம் அதிகம் இருக்கும். அதற்குள் சமூகவலைத் தளங்களின் ஆதிக்கம் எல்லா வற்றையும் விஞ்சியது.

பக்கம் 02 »

# தாயகமெங்கும் இன்று தமிழீழ மாவீரர் நாள்!

## துயிலும் இல்லங்கள் தோறும் மாலை 6.05 இற்கு சுடரேற்றல்

யாழ்ப்பாணம், நவம்பர் 27

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய வீரமறவர்களான மாவீரர்களுக்குத் தமிழினம் முழுவதுமே திரண்டு அஞ்சலி செலுத்தும் மாவீரர் தினம் இன்றாகும்.

இன்று மாலை 6.05 மணிக்குத் தாயகமெங்கிலும் புலம்பெயர் தேசங்களிலும் சுடரேற்றப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படும்.

பக்கம் 11 »



## யாழ்.பல்கலையில் நேற்று பிரபாகரனின் பிறந்த நாள்



யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 64ஆவது பிறந்த நாள் நேற்றுத் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நள்ளிரவு பக்கம் 11 »

## இராணுவத்தினர் ரோந்து



யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் நகர் மற்றும் நகரை அண்டிய பகுதிகள் குறுக்கு வீதிகள், தோட்டவெளிகள், பொது இடங்கள் என இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பக்கம் 11 »

## யாழ்.பல்கலை வளாகத்தில் புதிய மாவீரர் நினைவிடம்



யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள மாவீரர் நினைவுத் தூபி சீரமைக்கப்பட்டு உணர்வு பொங்க புதுப்பொலிவு பெற்றது.

தமிழீழ மாவீரர் நாள் நினைவேந்தல் இன்று தமிழர் வாழும் தாயகம் எங்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு யாழ்.பல்கலைக் பக்கம் 11 »

## பாசையூர் கடற்கரை முன்றிலில் மாவீரர் நினைவேந்தல் இன்று


### யாழ். மாநகர முதல்வர் அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழ் இனத்தின் விடுதலைக்காக, தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு கடந்த காலங்களில் நடைபெற்றது போன்று இம்முறையும் பாசையூர் கடற்கரை முன்றிலில் நடத்துவதற்கான பக்கம் 11 »

## விடுதலை வீரர்களை நினைவு கூர்வதை எந்த எதிர்ப்பினாலுமே தடுக்கமுடியாது

### வடக்கின் முன்னாள் முதல்வர் உறுதி



யாழ்ப்பாணம், நவ. 27

தமிழ் மக்களின் உரிமைக்களுக்காக உயிர் நீத்த எமது விடுதலை வீரர்களை நினைவுகூரும் எமது மக்களின் உணர்வை எந்த எதிர்ப்பினாலும் தகர்த்து விட முடியாது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். அவ்வாறு எதிர்ப்பவர்கள் எம் மக்கள் மனதில் பக்கம் 11 »

## புலிக்கொடி, வரைபடம் பாவித்து கோப்பாயில் கூட்டம் நடத்தத் தடை

யாழ்ப்பாணம்,நவ. 27

கோப்பாயில் 51ஆவது படைத் தலைமையகம் உள்ள காணிக்கு (மாவீரர் துயிலும் இல்லம்) எதிரே உள்ள வீரசிங்கம் சிறிதரன் என்பவருடைய காணியில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடி மற்றும் வரைபடங்களைக் பக்கம் 11 »

## தனக்கு எதிராகச் சாட்சியம் வழங்கிய அதிகாரியைச் சுட துரத்திய அட்மிரல்!

### கடற்படைத் தலைமையகத்தில் சம்பவம்



கொழும்பு, நவ. 27

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கின் முக்கிய சாட்சியான, இலங்கைக் கடற்படை அதிகாரி, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உள்ளிட்ட ஆறு கடற்படை பக்கம் 11 »

## பிரபாகரனின் பிறந்த நாள் 'கேக்'கை சிவாஜிலிங்கத்திடம் பறித்த பொலிஸ்

### அவரைக் கைது செய்து பின்னர் விடுவித்தனர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 27



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாட முயற்சித்தமைக்காக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. பக்கம் 11 »

## அங்குமிங்கும் தாவுகிறார் வசந்த சேனநாயக்க எம்.பி.

### நேற்றும் இரு தரப்பினருடனும் சங்கமம்

கொழும்பு, நவ. 27

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நேற்று நண்பகல் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் காபந்து அரசின் அமைச்சருமான வசந்த சேனநாயக்க நேற்று இரவு அலரி மாளிகையில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் பக்கம் 02 »

## மீண்டும் தலையெடுக்கின்றது ராஜபக்ஷ காலத்து அச்சுறுத்தல்

### மங்கள சமரவீர சாடல்

கொழும்பு, நவ. 27

லெப்.கொமாண்டர் லக்சிறி கலகமகே, இலங்கைக் கடற்படைத்தளத்தில் வைத்து தாக்கப்பட்டார் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கீச்சகப் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதில் அவர் – 1 1பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட பக்கம் 11 »

# நீதிபதியின் மெய்காவலர் சுட்டுக் கொலை; சந்தேக நபர்களின் பிணை அனுமதியை ரத்துச் செய்ய மறுத்தது யாழ்.மேல் நீதிமன்றம்

யாழ்ப்பாணம், நவ.27

நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் சந்தேக நபர்கள் மூவருக்கும் பிணை அனுமதி வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும் எனக் கோரி அரசுத் தரப்பினால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை விண்ணப்பத்தை யாழ் மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

2017 ஜூலை 22 ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களையும் சுமார் பதினாறு மாத காலத்துக்குப் பின்னர் கடுமையானநிபந்தனைகளுடன் பிணையில் செல்ல யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் அனுமதித்திருந்தார்.

அதை ஆட்டேசிபித்தே அரசுத்தரப்பினால் அதே நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எதிர்த் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஶ்ரீகாந்தா அதற்கு எதிராகக் கடுமையாக வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிபதி நேற்று தமது உத்தரவை வழங்கினார்.

சிரேஷ்ட சட்டத்தரணி என். ஶ்ரீகாந்தாவின் வாதங்களை ஏற்றுக்கொண்ட நீதிபதி, மேற்படி சந்தேக நபர்களுக்கு வழங்கப்பட்ட பிணை அனுமதியை ரத்துச் செய்ய மறுத்து நேற்றுக் கட்டளை வழங்கினார். அதன்படி, சந்தேகநபர்களுக்கு மேல் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய பிணை அனுமதி நடைமுறையில் இருக்கும்.

# ஊடகவியலாளர்களுக்கு பொலிஸார் அச்சுறுத்தல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாட்ட நிகழ்வுக்குச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு வல்வெட்டித்துறைப் பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்தனர்.

தலைவர் பிரபாகரனின் 64 ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்திலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆயினும் இந்த நிகழ்வுக்குப் பொலிஸார் தடையேற்படுத்தியிருந்தனர்.

இந்த நிகழ்வுகள் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியிலாளர்களை அச்சுறுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக அங்கு நின்ற ஊடகவியிலாளர்களைத் தமது கைத்தொலைபேசியில் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

அத்தோடு அங்கு நின்றிருந்த வாகனங்களின் இலக்கங்களையும் தமது கைத்தொலைபேசிகளில் புகைப்படமெடுத்தனர். (ஐ-07)

# கீரிமலை கடற்கரையில் ஒதுங்கிய திமிங்கலம்



யாழ்ப்பாணம், நவ. 27

கீரிமலைக் கடற்கரையில் திமிங்கலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது. இறந்து பல நாட்கள் ஆகியதால், திமிங்கலத்தின் உடல் சிதைவடைந்துள்ளது. சுமார் 30 அடி நீளமுள்ள இந்தத் திமிங்கலத்தில் இருந்து துர்நாற்றம் வீசுகின்ற போதும், பலர் அதனைப் பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெயர்தான் கைத்தொலைபேசி. ஆனால் 'ஸ்மார்ட் போன்கள்' என்றால் தொலைபேசியில் தொடங்கி, கமரா, இணையத்தளம், இன்ரநெற் என்று இத்யாதி எல்லாம் அதிகம் இருக்கும். அதற்குள் சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் எல்லாவற்றையும் விஞ்சியது.

முழு உலகையுமே கைக்குள் கொண்டு வரும் தொழில்நுட்பக் கருவி அது.

நம்மில் பலரின் ஆயுளில் அதிகநேரத்தை நம்மை அறியாமல் வீணாக்கித் தொலைக்கும் சாதனம் அதுதான்.

இதனால், நன்மையா, தீமையா என்ற பட்டிமன்றம் சமூகத்தின் பல மட்டங்களிலும் இறுதியான தீர்ப்பு வராத விவாதமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

பல அலுவலகங்களில் ஊழியர்களின் கவனக்குறைவுக்கும், வேலையில் அசிரத்தை, ஒழுங்கின்மை போன்றவற்றுக்கும் இந்த 'ஸ்மார்ட் போன்கள்' காரணமாக உள்ளன என்பது நமது அனுபவப்பாடம்.

இந்தப்பட்டறிவை அடிப்படையாகக் கொண்டு புதிய உள்ளக சுற்றறிக்கை ஒன்றை தமது யாழ் ஆஸ்பத்திரியின் சகல ஊழியர்களுக்கும் நேற்று முன்தினம் அனுப்பி வைத்திருக்கின்றார் யாழ். போதானா ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தி.

சகல ஆஸ்பத்திரி ஊழியர்களும் (டாக்டர்கள், தாதியர்கள், நிர்வாக அலுவலர்கள்உட்பட அனைவரும்) எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் கடமை நேரத்தில் ஸ்மாட் போன்களைப் பயன்படுத்த முடியாது என அந்த சுற்றறிக்கை தெரிவிக்கின்றது. (விசேடமாகக்கவனிக்கவும்:-'ஸ்மார்ட் போன்' பயன்படுத்துவதற்கு எதிராகவே இந்த உத்தரவு. சாதாரண கைத்தொலைபேசிகளை தேவையானசமயத்தில் தொலைபேசிஅழைப்புக்களுக்குப் பயன்படுத்துவதற்குத் தடை இல்லை என்பதுதான் இதன் அர்த்தம், என நினைக்கிறேன்.)

ஸ்மார்ட்ட போன்களை கடமை நேரத்தில் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்க்கும்படி யாழ். போதனா ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் வலியுறுத்தியுள்ள போதிலும் அவசர நிலைமையின் போது மேலதிகாரிகளின் அனுமதியுடன் அதனைப் பயன்படுத்தலாம் என்றும் ஊழியருக்கு அவர்சகாயமும் செய்துள்ளார்.

இந்தச் சுற்றறிக்கையின்படி யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் அடுத்த முதலாம் திகதியில் இருந்து தமது கடமைப் பிரதேசத்தில் 'ஸ்மாட் போன்களை' வைத்திருக்க முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆஸ்பத்திரியை நம்பி வந்து சிகிச்சை எடுக்கும் நோயாளர்களை அவர்களின் அனுமதியின்றியே படம் எடுத்து, விஷமம் செய்வதற்கு இந்த ஸ்மாட் போன்கள் தாராளமாக உதவலாம் என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

ஆஸ்பத்திரியில் பணியாளர்களின் கவனத்தைக் கடமை நேரத்தை சிதறவைப்பது என்பதற்கு அப்பால் வேறும் பல பிரச்சினைகள் ஸ்மார்ட் போன் பாவனையில் உள்ளன என்பது மறுக்கக் கூடியதல்ல.

இந்தச் சுற்றறிக்கையை அனுப்பியிருக்கும் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி திறமையான நிர்வாகி எனப் பெயரெடுத்தவர். அவரின் காலத்தில் யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகம் குறிப்பிடத்தக்க அளவு மேம்பாடடைந்தது என்பது கண்கூடு.

இந்தச்சுற்றறிக்கையும் அவரது துணிச்சலான நிர்வாகத்தின் ஒரு வெளிப்பாடுதான். ஆனால் இந்தச் சுற்றறிக்கைக்காக ஆஸ்பத்திரியின் உயர்மட்ட அதிகாரிகளில் இருந்து கடைமட்ட ஊழியர்வரை பலதரப்பட்ட தரப்புகளிடமிருந்தும் வைத்தியசாலைப் பணிப்பாளர் கடும் எதிர்ப்புகளையும், அதிருப்திகளையும், வசைபாடல்களையும் எதிர்கொள்ள வேண்டியவராக இருப்பார்.

எது, எப்படியென்றாலும் Keep it up Doctor!

யாழ். போதான வைத்தியசாலைப் பணிப்பாளரின் முன்மாதிரியை ஏனைய அரச நிறுவனங்களின் தலைவர்கள் ஏன் தமக்கு முன்னுதாரண வழிகாட்டலாகக் கொள்ளக்கூடாது?

-மின்னல்-

# மாவீரர்களை நினைவு கூர சகலரும் அணி திரளுங்கள்

## சிவாஜிலிங்கம் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 27



தமிழர்களின் இதயத்தில் வாழும் தலைவர் பிரபாகரனை எந்த ஆட்சியாளர்களாலும் அடக்கவோ அல்லது இல்லாமல் செய்யவோ முடியாது என்பதை அடக்குமுறையாளர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாற் தெரிவித்த வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இன்றைய மாவீரர் நாளில் மாவீரர்களை நினைவு கூருவதற்கு பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரள வேண்டுமென்றும் அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழினத்தில் தேசியத் தலைவர் பிரபாகரனின் 64 ஆவது பிறந்த தின நிகழ்வை வல்வெட்டித்துறை ஆலடியிலுள்ள அவருடைய இல்லத்திலே கொண்டாடுவதற்கு முயற்சியெடுத்திருந்தோம். இதற்கமைய அந்தக் காணியைத் துப்பரவு செய்வதற்கு நான்கு தொழிலாளிகளை அனுப்பியிருந்தபோது அவர்களைக் கடமை செய்யவிடாது தடுத்து அடையாள அட்டைகளையும் பறித்து அங்கிருந்து செல்லுமாறு அவர்களை விரட்டியனுப்பியிருந்தனர்.

அங்கு இரவு முதல் பொலிஸார் குவிக்கப்பட்டு இந்த நிகழ்வைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். பொலிஸார் அப்பகுயில் அதிகளவில் குவிக்கப்பட்டனர்.

நாங்கள் மூவர் ஓட்டோவில் சென்றபோது அவர்கள் உடனடியாக எம்மைச் சுற்றிவளைத்து நாம் கொண்டு சென்ற கேக் உள்ளிட்ட பொருள்களைப் பறிக்க முயன்றார்கள்.

ஆனால் நான் அதனைக் கொடுக்கவில்லை. அப்போது இங்கு பிறந்த நாள் நிகழ்வு செய்ய முடியாது என்று பொலிஸார் கூறியிருந்தனர். இதனையடுத்து அங்கிருந்து வெளியேறி வல்வெட்டித்துறை தீருவில் பொதுப் பூங்காவுக்குச் சென்று அங்கு வைத்து கேக்கை வெட்டுவதற்கு ஆயத்தமாகியபோது எம்மைப் பின்தொடர்ந்து வந்த பொலிஸார் அங்கு நின்றிருந்தவர்களைச் சுற்றிவளைத்து நாம் கொண்டு சென்ற பொருள்களைப் பறிமுதல் செய்திருந்தனர்.

எங்களையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். எம்மைத் தொடர்ந்து தடுத்து வைத்தால் சட்டம் ஒழுங்கு சீர்குலையும் என்று கூறி எம்மை விடுவித்தனர்.

இன்று மாவீரர் தினத்தை அனுஸ்டிப்போம் என்று நான் கூறியபோது அதைப் பற்றிப் பிரச்சினையில்லை என்றும் பொலிஸார் கூறினார்கள்.

தாயகத்தில் மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் தமிழர்களின் இதயத்தில் பிரபாகரன் வாழ்கிறார். அதனை எந்த ஆட்சியாளர்களாலும் அகற்ற முடியாது அல்லது இல்லாமல் செய்ய முடியாது என்பதை அடக்குமுறையாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

போரிலே கொல்லப்பட்ட எங்கள் மாவீரர்கள் அத்தனை பேரையும் நினைவு கூரும் நிகழ்ச்சிகள் தாயகத்தில் மாத்திரமல்ல புலம்பெயர் தேசங்களிலும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதற்கமைய தாயகத்திலே உணர்வுபூர்வமாக இந்த மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு முன்வரவேண்டும். எந்தத் தடைகள் வந்தாலும் அவற்றை உடைத்தெறிந்து பல்லாயிரக்கணக்கிலே திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முன்வரவேண்டுமென்றும் தமிழ்ச் சொந்தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்–என்றார். (ஐ-07)

## அங்குமிங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் கூட்டத்திலும் பங்கேற்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சராக இருந்த வசந்த சேனநாயக்க, அண்மையில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பை அடுத்து, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். இதையடுத்து அவர் சுற்றுலாத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

எனினும், மஹிந்த ராஜபக்ஷ அரசால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் சாய்ந்தார். சுற்றுலாத்துறை அமைச்சர் பதவியில் இருந்து விலகப் போவதாகவும் அறிவித்திருந்தார்.

எனினும், அவரது இடத்துக்கு எவரும் நியமிக்கப்படாத நிலையில், கடந்த வாரம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வசந்த சேனநாயக்க பங்கேற்றிருந்தார்.

இதனால் அவர் மீண்டும் மஹிந்த அணியின் பக்கம் சென்றுள்ளார் என்று கருதப்பட்டது.

நேற்று நண்பகல் பிரதமர் மஹிந்தவின் இல்லத்துக்குச் சென்ற அவர் சுமார் ஒரு மணி நேரம் மஹிந்தவுடன் பேச்சு நடத்தினார் என நம்பகமாக அறிய வந்தது.

பின்னர் நேற்று இரவு அலரி மாளிகையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்திலும் வசந்த சேனநாயக்க பங்கேற்றார். (ஐ)

# சகல ரகசியங்களையும் அம்பலப்படுத்துவேன்!

## மைத்திரிக்கு சாகல எச்சரிக்கை

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம் மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து சுமத்தினால், தாம் பல இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தவேண்டிய நிலை வரும் என்று எச்சரித்துள்ளார் முன்னாள் அமைச்சரும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகல ரத்நாயக்க.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களிடம், ஜனாதிபதி நேற்று முன்தினம் வெளியிட்ட குற்றச்சாட்டுகளை அடுத்தே, சாகல ரத்நாயக்க தனது கீச்சகப் பதிவுகளின் மூலம், இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பொறுப்புவாய்ந்த அமைச்சர் என்ற வகையில், உயர்மட்ட விசாரணைகளில் ஜனாதிபதி செய்த தலையீடுகளை நான் ஒருபோதும், பகிரங்கமாகப் பேசியவன் அல்லன்.

ஆனால், இந்தக் காட்டுத்தனமான குற்றச்சாட்டுகள் தொடருமானால், உயர்மட்ட விசாரணைகளில் யார், எப்போது, எங்கே, எப்படித் தலையீடுகளைச் செய்தார்கள் என்ற விவரங்களை நான் வெளிப்படுத்த நேரிடும்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஊழல் நடந்தது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம்சாட்டுவாரேயானால், அப்போது கூட்டு அரசின் தலைவராக, அமைச்சரவையின் தலைவராக இருந்த அவருக்கும் கூட அதில் சமமான பங்கு உண்டு.



ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படுவதை வரவேற்கிறோம். ஆனால், இந்த விசாரணைகளில் இருந்து அவரும் தப்பிக்க முடியாது.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நிசாந்த சில்வா இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்து, பாதுகாப்புச் செயலருக்கு, பொலிஸ் மா அதிபர் அனுப்பிய கடிதமே, ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தார் என்பதைக் காட்டுகிறது.

ஜனாதிபதியின் தலையீடுகளுக்கு இது ஒரு தெளிவான உதாரணம். இது மூன்றரை ஆண்டு பழக்கத்தின் தொடர்ச்சி தான்– என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில், பிறப்பித்த உத்தரவுக்கு அமையவே, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நிசாந்த சில்வா நீர்கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்று குறிப்பிட்டு, பாதுகாப்புச் செயலருக்கு, பொலிஸ்மா அதிபர் கடிதம் அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முக்கிய அரச நிறுவனங்களை கைப்பற்றிய மோசடியாளர்கள்

## மைத்திரிக்குப் பெரும் தலைவலி



கொழும்பு, நவ. 27

மஹிந்தராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றம் சாட்டப்பட்டசிலர் அண்மையில், முக்கிய அரச நிறுவனங்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்ட விவகாரம் ஜனாதிபதிக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சி மாற்றத்தை அடுத்து. ராஜபக்ஷவினர், அரசதுறை நிறுவனங்களின் முக்கிய பதவிகளுக்குத் தமது ஆதரவாளர்களை நியமித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவராக கபில சந்திரசேனவும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நாலக கொடகேஹவும், நியமிக்கப்பட்டமை கடும் எதிர்ப்பையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக இவர்கள் விசாரணைகளை எதிர்கொண்டு வரும் நிலையிலேயே இந்த நியமனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இதுபற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், கபில சந்திரசேன மற்றும் நாலக கொடகேஹவவின் நியமனங்களைத் தாம் எதிர்க்கிறார் எனவும், அந்த நியமனங்கள் தற்போது திரும்பப் பெறப்பட்டுள்ளன எனவும் கூறினார்.

முன்நோக்கிச் செல்லவேண்டிய தேவை இருந்ததால்தான், ஊழல் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ளவர்களை நியமிப்பதற்குத் தாம் தெரிவு செய்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அட்மிரல் ரவீந்திர மீது நடவடிக்கை; பொலிஸ்மா அதிபருக்குப் பரிந்துரை

கொழும்பு, நவ. 27

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர்.பி.செனிவிரத்ன, பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு உள்ளிட்ட முக்கியமான பல வழக்குகளை விசாரித்து வரும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி நிசாந்த சில்வா, விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளவர் என்று அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குற்றம்சாட்டியிருந்தார்.

எனினும், அந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என்று பொலிஸ்மா அதிபருக்குக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை அளித்திருந்தனர்.

இந்தநிலையில், முக்கியமான விசாரணை அதிகாரி மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, விசாரணைகளில் தலையீடு செய்ய முயன்ற, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் செனிவிரத்ன, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவுக்கு எழுத்து மூலம் பரிந்துரைத்துள்ளார். (ஐ)

# ஐ.தே.கவுக்கு எதிராக நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா, நவ. 27

ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்று நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பு பொதுஜன பெரமுனவின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கூறுகையில் –

இலங்கையில் தற்போது பாரிய அரசியல் நகர்வொன்று இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றது. இதன் காரணமாக நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் பல இடம்பெறுகின்றன.

ஆகையால், இத்தகைய சூழ் நிலையில் தேர்தலை நடத்துவதே சிறந்ததென்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் மூவின மக்களும் இணைந்து இவ்வார்ப்பாட்டத்தைமேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் நாடு பொருளாதார ரீதியில் பாரிய வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ள நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவை பிரதமராக நியமித்தார். ஆனால் இந்த நல்ல செயற்பாடு பாரதூரமாகத் தற்போது போய்க்கொண்டு இருக்கின்றது என குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, 'வேண்டும் வேண்டும் தேர்தல் வேண்டும்', 'ஐக்கிய தேசிய கட்சியினரே இதுவரை ஏமாற்றியதுபோதும் இனியும் வேண்டாம்', 'இலங்கையின் இறையாண்மைக்கு எதிராகச் செயற்படும் சபாநாயகர் பதவி விலகு', 'அரசஉடைமைகளைவிற்றுநாட்டைசூறையாடுகின்ற ஐக்கியதேசியக்கட்சியைத்தேர்தலில்தோற்கடிப்போம்' போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தின, வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபைத் தலைவர், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# விமலுக்கு எதிரான வழக்கு விசாரணை அடுத்த வருடம்

ஏழரைக் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களைச் சட்டவிரோதமான முறையில், தனது வருமானத்துக்கு அப்பால் சேர்த்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கை அடுத்த வருடம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

விமல் வீரவன்ஸவுக்கு எதிராக, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுக் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, அடுத்த வருடம் ஜனவரி மாதம் 14ஆம் திகதி அதனை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸ அமைச்சராகப் பதவி வகித்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் ஏழரைக் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை சேர்த்தார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாணந்துறையில் 4 கடைகள் தீக்கிரை!

கொழும்பு, நவ. 27

சுய நலன் கருதி அரசியல் செய்யாமல், தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, அரசியலில் ஈடுபட முன்வருமாறு அமைச்சர் பைசர் முஸ்தபா, சகல தரப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாணந்துறைநகரின் பிரதான வீதியில், முஸ்லிம்களுக்குச் சொந்தமான நான்கு கடைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீக்கிரையானதையடுத்து, அமைச்சர் பைஸர் முஸ்தபா உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று, நேரடியாக நிலைமைகளைக் கண்டறிந்தார்.

அங்கிருந்தோரிடம் இச்சம்பவம் தொடர்பிலான விவரங்களையும் தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

அத்துடன், குறித்த சம்பவத்தின் பின்னணியில், எது சரி, எது பிழை என்பது தொடர்பில் ஆதாரபூர்வமான தகவல்களையும் பெற்று, தேவையான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அமைச்சர் பொலிஸாரிடமும் பாதுகாப்பு அதிகாரிகளிடமும் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் இங்கு கருத்துத் தெரிவிக்கும்போது –

இன்றைய கால கட்டத்தில், மக்களுக்கு மத்தியில் புரிந்துணர்வையும் தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதே சிறந்தது. இதை விட்டுவிட்டு, அரசியல் இலாபம் கருதி அல்லது காட்டிக்கொடுக்கும் நோக்குடன் சமூகங்களுக்கு மத்தியில் இவ்வாறான செயல்களை யாராவது செய்வார்களேயானால், அது மன்னிக்க முடியாத பாரிய குற்றமாகும் என நான் கருதுகிறேன்.

எனவே, குறுகிய நோக்கங்களை மனதிலிருந்து அகற்றி, தேசிய நல்லிணக்கத்திற்காக சாதி, சமய, கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒத்துழைக்க முன்வர வேண்டும். அத்துடன், கட்சிபேதங்களை மறந்து நாட்டைக் கட்டியெழுப்பவும் முன்வர வேண்டும் – என்றார்.

இதேவேளை, முஸ்லிம்களுக்குச் சொந்தமான நான்கு கடைகள் முற்றிலும் தீக்கிரையானதையடுத்து, அருகாமையில் இருந்த பெரும்பான்மை இனத்தவரின் கடையொன்றும் எரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாவீரருக்கு நாம் செய்யும் கைமாறு

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்று மிக முக்கிய மான நாள்.

மாவீரர் தினம் இன்று.

தமிழர் தாயக விடுதலை வேள்வியில் தம்முயிரை ஆகு தியாக்கிய ஆயிரமாயிரம் வீரமறவர்களின் தியாகத்தை மனதில் நிறுத்தி, அவர்களை ஏற்றிப் பூஜிக்கும் உன்னத நாள்.

*"மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர் கள்! தாம் மானம் வாழ என்றே தம்மையே தந்துளோர்கள்"* – என்றான் ஒரு கவிஞன்.

சத்திய வெறியோடு மரணத்தை வென்று, நித்திய மாய்த் தமிழினத்தின் ஆன்மாவில் கலந்து நிற்கும் ஒப்புயர்வற்ற, உத்தம தியாகிகளை, நெஞ்சுருகத் தமிழினம் போற்றி நிற்கும் உயரிய நாள் இது.

காலத்தின் காவியமாக எமது தமிழர் தேசத்தின் – தமிழர் தேசியத்தின் – ஆன்மாவாகக் கலந்து நிலைத் திருக்கும் அந்த உத்தமர்களை எமது மக்கள் உள்ளத்தில் ஏற்றிப் போற்றும் உயர்ந்த நாள் இதுவன்றோ...!

தனது மரபு வழித்தாயகத்தில் இனத்தின் இருப்புக்காக சுயத்தையே தொலைத்தவர்கள் அந்த வீர மறவர்கள். நிலையற்ற தமது இருப்பை உணர்ந்து, இனத்தின் நிலை யான இருப்புக்காக உயிராப்பணம் செய்து, தம் வாழ்வுக்கே, ஓர் அர்த்தம் கொடுத்தவர்கள்; பெருமை சேர்த்தவர்கள்.

தம் உடலின் சிதறும் கணங்கள் தெரிந்திருந்தும், இன விடுதலை என்ற ஒரே உயரிய இலக்குக்காக – உன்னத நோக்கத்துக்காக – உத்தம குறிக்கோளுக்காக – அதனைத் தேடிச்சென்று அணைத்தவர்கள். காற்றோடு கலந்தவர்கள்; நெருப்பின் சுவாலைக்குள் அக்னிச் சுடராய்ப் புகுந்து பெரும் வெடிப்புக்களை நிகழ்த்தியவர்கள்; கடலின் ஆழத்துக்குள் கலங்கரை விளக்காக ஜொலித்து, அதற்குள்ளேயே கரைந்த் தவர்கள். வானத்திலும் கூட வல்லாண்மை காட்டி வரலாறு படைத்தவர்கள்.

ஈடு இணையற்ற ஈகங்களை இயற்றி, ஒப்புயர்வற்ற தியாகங்களைச் செய்து, எல்லை கடந்த வல்லமையைக் காட்டி, அளவற்ற அர்ப்பணிப்புக்களை ஆற்றி, தம் இனத் தின் மாண்புக்காக என்றஒன்றுக்காக மட்டுமே தங் களையே அர்ப்பணித்த தற்கொடையாளர்களை நாம் பூஜிக்கும் நாள் இது.

ஈழத் தமிழினம் புரிந்த வியத்தகு சாதனைகளின் சரித்திரக் குறியீட்டு நாள் இதுதான் என்று கூறுவதும் பெருத்தமானதுதான்.

இத்தகைய உயரிய நாளை, அந்த வீரமறவர்களின் நினைவோடும், உறுதியோடும் அனுஷ்டிக்கும் தகுதி நிலையில் நமது தமிழினம் இன்று இருக்கின்றதா என் பதே இன்று நம்மைக் குடையும் பிரதான கேள்வியாகும்.

அந்தத் தேசச் சிற்பிகளின் ஈகங்கள், தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள், தற்கொடைகள், வியத்தகு வீர காவி யங்கள், வல்லமைச் சிறப்புக்கள், அளப்பரும் சாதனைகள் எல்லாம் தாண்டியும் நமது இனத்துக்கு விடிவு கிட்டவே இல்லை என்பதே எமது முதலாவது மனக்குமுறல்.

இத்தகைய உயரிய வீரபுருஷர்களையும், தியாகச் செம் மல்களையும், வரலாற்று உத்தமர்களையும், ஒழுக்க சீலர் களையும், சரித்திர நாயகர்களையும் ஒரே சமயத்தில் பல் லாயிரமாகத் தந்து நின்ற தமிழினத்தின் இன்றைய போக்கும், நோக்கும் நம் மனதைப் பிறாண்டும் அடுத்த மனக்குமுறல்களாகும்.

இந்த பூமிப்பந்தையே தமது பூகம்ப அதிர்வுகளால் புரட்டிப் போட்ட போராட்ட வரலாறுகளில் எவற்றுக்கும் குறைந்துவிடாத வீரத்தையும், தீரத்தையும், தியாகத்தையும் கட்டிய விடுதலை வேள்வி ஒன்றை நடத்திய தமிழினம், இன்று அதில் தோற்றுப்போய்த் துவண்டு நிற்கின்றது.

இனி என்ன என்பதுதான் கடந்த ஒன்பது ஆண்டுகளாக – இந்தத் தடவை பத்தாவது ஆண்டாக – மாவீரர்தினத்தில் நம் மனதைக் குடையும் கேள்வி.

வீரத்தியாகிகளின் கடந்த கால வரலாற்றை – அவர்களின் தியாகங்களை – போற்றி, புகழ்ந்து, பூஜிப்பதோடு நாம் அடங்கி விடுவதா?

ஆயுதப் போராட்டத்துக்கு ஒரு வரலாற்று நெருக்கடி வந்தபோது – தலைவர் பிரபாகரன் தாம் சுதுமலையில் ஆற்றிய அந்த சரித்திரப் பிரசித்திபெற்ற உரையில், இன் றைய நெருக்கடி நிலைக்கான தீர்வையும் கோடி காட்டிச் சென்றுள்ளார்.

*"எமது போராட்டத்தின் வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது குறிக்கோளை அடைவதற்கான போராட்டங்கள் மாறப்போவதில்லை, எமது குறிக்கோளை ஈடேற்றுவதற்கு எமது மக்களின் முழுமையான – ஒன்றிணைந்த – ஆதரவு எப்போதும் இருக்கவேண்டும்."* – இதுவே சுதுமலையில் தலைவர் பிரபாகரன் முத்தாப்பாய் முடித்த உரையின் இறுதி வாசகங்கள்.

அந்த வழிகாட்டலை இந்த உயரிய நாளில் எமது சபத மாகக் கொள்வோம். இதுவே எம் மாவீரர்களின் ஒப்பற்ற தியாகங்களுக்கு நாம் செய்யும் கைமாறாக இருக்கும்.

# ஒரு முறை காலை பின்னோக்கி வைப்பதே ஜனாதிபதி மைத்திரிபாலவுக்குச் சிறந்தது

## குமார வெல்கம ஆலோசனை



கொழும்பு, நவ. 27

தனிநபர்கள் குறித்தும், கட்சி குறித்தும் யோசிக்காமல் நாட்டைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மா னம் ஒன்றுக்கு வரவேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

தனியார் வானொலி நிகழ்ச்சி யொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் இருவரை நியமித்த தன் மூலம் ஜனாதிபதி குழியில் விழுந்துள்ளார். தற்போதைய அரசுக்கு ஒருபோதும் நாடாளு மன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதுதான் உண்மை.

விரும்பியோ, வெறுத்தோ ஒரு முறை காலைப் பின்னோக்கி வைக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதுதான் அதி உயர்ந்த மகாத்மா அரசியலாகும்.

ஜனாதிபதி இந்த அரசைக் கொண்டு போகப் பெரும்பான் மையை நிரூபித்திருக்கவேண்டும். அவ்வாறு நிரூபிக்க ஜனாதிபதி தவறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக இருந்து கொண்டு இந்தக் கருத்தைக் கூறுவதை யிட்டு, சிலர் என்னுடன் கோபித்துக் கொள்வார்கள்.

இருப்பினும், இதுதான் உண்மை – என்றார். (ஐ)

# ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சி



கொழும்பு, நவ. 27

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற்பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப் படி, இலங்கை ரூபா மறுபடியும் வீழ்ச்சி கண்டுள்ளது.

இதன்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 181. 54 ரூபாவாகும்.

இலங்கை வரலாற்றில் இலங்கை ரூபா அதிகம் வீழ்ச்சியடைந்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (ஐ)

# மேலதியக வகுப்பு நடத்தத் தடை

கொழும்பு, நவ. 27

கல்விப் பொதுத் தராதரச் சாதாரணதரப் பரீட் சைகளுக்கான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகளை நடத்து வதற்கு தடை விதி க்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாளை நள்ளிரவு முதல் டிசம்பர் 12 ஆம் திகதி வரை இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிக்கையொன்றை வெளியிட் டுள்ளது. (ஐ)

# மாத்தறை மாணவன் படுகொலை; சரணடைந்த சந்தேகநபர் மறியலில்

மாத்தறை, எலவில்ல வீதியிலுள்ள தனியார் வகுப்புக்கு அருகில் வைத்து, சக மாணவனைப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், தேடப் பட்டு வந்த பிரதான சந்தேகநபர், மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

இந்நிலையில் இந்தச் சந்தேக நபரை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி வரை விளக்க மறி யலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

கடந்த 24ஆம் திகதி இடம் பெற்ற சம்பவத்தில், உயர்தரத் தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனே உயிரிழந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நவ. 30 ஆம் திகதி முதல் பாடசாலை விடுமுறை

மூன்றாம் தவணை விடுமுறைக்காக சகல அரச பாடசாலைகளும் நவம்பர் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமூடப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

பாடசாலைகள் மீண்டும் முதலாம் கல்வி தவணைக்காக 2019 ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் கல்வி அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை, இவ்வருடம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதரண தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகும். (ஐ)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு

16
2018

கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை
சகலருக்கும் கல்வி சமத்துவமாய் வழங்குவோம்.

பாரனில் பெண்கள் சரிநிகரராய் வளர்ச்சிபெற சமூகத்தில்
பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடுவோம்!

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

JSAC

### வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது, மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள். "

- மிகைல் கோபர்ச்சேவ் (சோவியத்யூனியனின் முன்னாள் அதிபர்)

### நாளை

28.11.2018
புதன்கிழமைகிழமை
நட்சத்திரம்:பூசம் மு.ப. 11.57வரை
திதி :ஷஷ்டி பி.இ.12.25 வரை
சுபநேரம் :4.43 – 6.13வரை
இராகுகாலம் : 12.13 – 1.43 வரை

# தமிழரசுவுக்கு எதிரான சதீஸின் மனு ஒருமுக விசாரணைக்காக நியமிப்பு

## சுமந்திரன் ஓடி ஒளிந்துவிட்டார் என்கிறார் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், நவ. 27

**வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் கந்தசாமி சதீஸை, இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கும் கட்சித் தலைமையின் தீர்மானத்துக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒருமுக விசாரணைக்கு நியமிக்கப்பட்டது.**

மனு நேற்றுத் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தபோது, எதிர்மனுதாரர்களான தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் கி.துரைராசசிங்கம் மற்றும் பொருளாளர் பொ.கனகசபாபதி ஆகியோர் மன்றில் முன்னிலையாகத் தவறினர். அவர்கள் சார்பிலான சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கே.சயந்தன் ஆகியோரும் மன்றில் தோன்றவில்லை.

எதிர்மனுதாரர் மன்றில் தோன்றி பதில் அணைக்கத் தவறியதால், மனு மீதான விசாரணையை மனுதாரரை மட்டுமே கொண்ட ஒரு முக விசாரணைக்கு நியமித்து வழக்கை ஒத்திவைத்து மாவட்ட நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன் உத்தரவிட்டார்.

தமிழர் விடுதலைக் கழகம் (ரெலோ) கட்சியைச் சார்ந்த கந்தசாமி சதீஸ், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

ரெலோவின் கட்டுப்பாடுகளிலிருந்து விலகிச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் அந்தக் கட்சியின் பரிந்துரையின் பேரில் சதீஸை தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து அந்தக் கட்சி நீக்கியது.

இந்த நடவடிக்கையின் ஊடாக அவரை நகர சபை உறுப்புறுமையிலிருந்து நீக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கும் தமிழரசுக்கட்சிசார்பில்கடிதம்அனுப்பிவைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமை எடுத்துள்ள தீர்ம ானத்துக்கு ஆட்சேபனை தெரிவித்தும் அதனை வெற்றும் வறிதானதுமாக்கும் கட்டளையை வழங்கக் கோரியும் கந்தசாமி சதீஸ் சார்பில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனால், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவின் பிரதிவாதிகளாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, செயலாளர் கி.துரைராசசிங்கம் மற்றும் பொருளாளர் பொ.கனகசபாபதி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரரின் இடைக்கால நிவாரணமான, தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கும் பிரதிவாதிகளின் அறிவித்தலுக்கு கட்டாணை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்ற மாவட்ட நீதிமன்றம், 14 நாள்கள் என்ற அடிப்படையில் இடைக்காலத் தடை உத்தரவை வழங்கியது.மனு மீதான விசாரணை நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மனு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. பிரதிவாதிகள் மன்றில் முன்னிலையாகத் தவறினர். அத்துடன், அவர்கள் சார்பான சட்டத்தரணிகளும் மன்றில் தோன்றவில்லை. அதனால் ஒருமுக விசாரணைக்கு வழக்கை நியமித்து மாவட்ட நீதிமன்றம் மனுவை ஒத்திவைத்தது.

வழக்கை எதிர்கொள்ளத் துணிச்சல் அற்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் அவரது சட்டத்தரணிகளும் ஓடி ஒளிந்துகொண்டுள்ளனர் என்று மனுதாரரின் சட்டத்தரணி நீதி மன்றிலிருந்து வெளியேறும்போது ஊடகவி யலாளர்களிடம் தெரிவித்தார். (ஐ-07)

## நமது இலட்சிய நெருப்பு அணைந்து போகக்கூடாது!

### மாவீரர் நாளை முன்னிட்டு அருட்திரு தமிழ்நேசன் அறிக்கை

மன்னார், நவ. 27

விடுதலைக்கனவை இதயத்தில் தாங்கி சாவைத் தழுவிய சரித்திர நாயகர்களாம் மாவீரர்களை இன்று நாம் நெஞ்சிலிருத்தி அஞ்சலிக்கின் றோம். தியாக வேள்வியில் வெந்துருகிய இந்த மாவீரர்கள் நமது வணக்கத்திற்கும் மரியாதைக்கும் உரியவர்கள்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் அருட்திரு தமிழ்நேசன் அடிகள்.

மாவீரர் நாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

மாவீரர்கள் இந்த உலகத்தைத் துறந்தவர்கள், வாழ்வின் வசந்தங்களைத் தொலைத்தவர்கள். இளமையின் இனிமைகளை நிராகரித்தவர்கள். சுதந்திர தேசம் பற்றிய கனவையே தம் கண்முன் கொண்டு ஓயாது ஓடிக்கொண்டிருந்தவர்கள்.

தமது உன்னதமான உயிரையே உவந்தளித்த இந்த உத்தமர்களுக்கு இன்று நாம் தலைசாய்த்து மரியாதை செய்வோம். தனது தாயக மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காக களப்பலியான அனைவரையும் இன்று நாம் நினைவிலிருத்துவோம். வீரசுதந்திரம் வேண்டி வீறுகொண்டெழுந்து களப்பலியான எல்லா இயக்கங்களையும் சேர்ந்த வீரமறவர்களுக்கு இன்று நாம் வணக்கம் செலுத்துவோம்.

காலச்சுழற்சியில் நமது விடுதலைக் கனவுகள் எல்லாம் கலைந்துவிட்டன் என நாம் நினைக்கலாம். ஆனால் நமது இலட்சிய நெருப்பு அணைந்துபோகக் கூடாது. அது கனன்றுகொண்டு இருக்க வேண்டும். எந்தக் காரணங்களுக்காக அகிம்சைப் போராட்டமும் ஆயுதப்போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டனவோ அந்தக் காரணகள் எல்லாம் இன்னமும் அப்படியே இருக்கின்றன. தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை அழித்து விட்டோம் என்று கூறிவரும் இலங்கை அரசுகள் தமிழர்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்க்க இதயசுத்தியோடு எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இன்று ஆட்சியதிகாரத்தைப் பிடிக்க தமக்குள்ளே முட்டிமோதிக்கொண்டிருக்கின்றன.

போருக்குப் பின்னர் மேலெழுந்த பிரச்சினைகளான நில ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகள், காணாமலாக்கப்பட்டோர் போன்றவை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே தொடர்ந்து கொண்டு இருக்கின்றன.



எனவே தமிழர்களாகிய நாம் நமது விடுதலைக் கனவுகளை மீண்டும் கண்முன் வைத்து அரசியல் வழியில் – அகிம்சைப் பாதையில் – தொடர்ந்தும் போராடுவோம். நமது இலக்குகளை அடைவதற்குரிய பொறிமுறைகளை வகுத்துக்கொள்வோம். நமக்குள்ளே இருக்கும் அரசியல் மற்றும் இன, மத, பிரதேச, சாதி வேற்றுமைகளைக் களைந்துவிடுவோம். ஒற்றமையே நமது பலம் என உணருவோம். இது தான் மாவீரர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக அமைய முடியும்–என்றுள்ளது.(ஐ)

## சபாநாயகரின் கொடும்பாவியை எரித்து மஹிந்த அணி ராகலையில் போராட்டம்

பொதுத்தேர்தலை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்தி,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்று இராகலையில் கையெழுத்து வேட்டையில் இறங்கியது.

அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி 10 இலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் நடவடிக்கையை மஹிந்த அணி கடந்த சனிக்கிழமை கடவத்தையில் ஆரம்பித்தது. நேற்று முன்தினம் ஹற்றனிலும், நாட்டில் ஏனைய சில பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே நேற்று இராகலையில் கையொப்பங்கள் திரட்டப்பட்டன.

இதற்கான நிகழ்வு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் சீ.பீ. ரத்னாயக்காவின் தலைமையில் நடைபெற்றது.

பொதுத்தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோஷங்கள் எழுப்பட்டமைடன், சபாநாயகரின் கொடும்பாவியை எரித்து, ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இதன்போது போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர். பேரணியையும் நடத்தினர். (ஐ)



## குற்றவியல் பிரேரணை வரும் என அஞ்சமடைந்தாராம் மைத்திரிபால

தனக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைக் கொண்டு வர வழியமைத்து விடும் என்பதால்தான், கடந்த 14ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தான் நிராகரித்தார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதனை அவர், வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் நேற்று முன் தினம் நடத்திய சந்திப்பின்போது உறுதி செய்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதற்கு, நவம்பர் 14ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முதலாவது பந்தியை நீக்குமாறு நிபந்தனை விதித்தேன்.

அதற்குக் காரணம், அதில் கடந்த மாதம் ஒக்ரோபர் 26 ஆம் திகதி, பிரதமரைப் பதவி நீக்கியும், புதிய பிரதமரை நிய மித்தும் ஜனாதிபதி வெளியிட்ட இரண்டு வர்த்தமானி அறிவிப்புகளும் அரசமைப்புக்கு முரணானவை, செல்லுபடியற்றவை என்று கூறப்பட்டிருந்தது.

அந்தப் பந்தியை உள்ளடக்கிய தீர்மானத்தை ஏற்றுக் கொண்டால், நான் அரசமைப்பை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டுகளை சுமக்க நேரிடும். பின்னர் அது, எனக்கு எதிராகவும் பயன்படுத்தப்படலாம்.

அதனை நான் ஏற்றுக்கொண்டால், நான் அரசமைப்பை மீறிவிட்டதாக, எதிர்காலத்தில் என் மீது குற்ற விசாரணைப் பிரேரணையைக் கொண்டு வர முடியும்– என்றார்.(ஐ)

# ரஜினி - பா.ஜ.க. கூட்டு ஏற்பட்டால் தமிழகத்தில் 39இல் 25இல் வெற்றி

## மத்திய உளவுத்துறை ஆய்வறிக்கையில் தகவல்

சென்னை,நவ.27

இந்தியாவில் அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெற இருக்கும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில், நடிகர் ரஜினியுடன், பாரதீய ஜனதாக் கட்சி கூட்டணி அமைத்துப் போட்டியிட்டால், தமிழகத்தில் உள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 25 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு இருப்பதாக, மத்திய உளவுத் துறை எடுத்துள்ள, ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது.

சமீப காலமாக, அரசியல் தொடர்பாக ரஜினி தெரிவிக்கும் கருத்துகளுக்குத் தமிழக பா.ஜ.க. தலைவர்கள் ஆதரவு அளித்து வருகின்றனர். பா.ஜ.கவுக்கு ஆதரவாகவே, ரஜினியும் பேசி வருகிறார்.

அடுத்த சட்டசபை தேர்தலுக்குள், கட்சி தொடங்குவார் என ரஜினி அறிவித்திருந்தாலும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகவே அவர் கட்சி தொடங்கி விடுவார் என்ற எதிர்பார்ப்பு பா.ஜ.க. வினரிடம் உள்ளது.

சமீபத்தில், "பா.ஜ.க. ஆபத்தான கட்சியா?" – என்ற கேள்வியை ரஜினியிடம் நிருபர்கள் எழுப்பினார். அதற்கு அவர், "எதிர்க்கட்சிகள் அப்படி நினைத்தால், பா.ஜ.க. அவர்களுக்கு ஆபத்தான கட்சியாகத்தான் இருக்க முடியும். பத்து பேர் இணைந்து, ஒருவரை எதிர்த்துப் போரிட்டால், யார் பலசாலி என்பதை, அனைவரும் புரிந்துகொள்ள முடியும்" என்று பதிலளித்தார்.

பிரதமர் மோடியை, பலசாலி என, ரஜினி தெரிவித்து உள்ள நிலையில், அவருடன் கூட்டணி அமைத்து, லோக்சபா தேர்தலில் போட்டியிட்டால், பா.ஜ.க. வெற்றி வாய்ப்பு எப்படி இருக்கும் என, 39 தொகுதிகளில், மத்திய உளவுத்துறை தரப்பில், ஆய்வு எடுக்கப்பட்டுள்ளது.

அந்த ஆய்வு முடிவில், 25 தொகுதிகளில், ரஜினி – பா.ஜ., கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதுகுறித்து, பா.ஜ.க. வட்டாரங்கள் கூறியவை வருமாறு:–

நாடாளுமன்றத் தேர்தலில், நாடு முழுவதும், பிரதமர் மோடியின் சாதனைகளை பிரசாரம் செய்ய, பா.ஜ.க. திட்டமிட்டுள்ளது. தென் மாநிலங்களில், இந்த முறை, பா.ஜ.கவுக்கு அதிக எம்.பி.க்கள் கிடைப்பதற்கான வியூகத்தை, பா.ஜ.க. தேசிய தலைவர் அமித் ஷா அமைத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில், ரஜினியுடன் பா.ஜ.க, கூட்டணி அமைத்து போட்டியிடும் போது, மோடி, ரஜினி என இரண்டு வசீகர பிம்பத்தால், தமிழகம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களில், பா.ஜ.கவுக்கு ஆதரவு அலை வீசும் என, அமித் ஷா, கணக்கு போட்டுள்ளார். மேலும், மத்திய உளவுத்துறை



தரப்பில் எடுக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையும், ரஜினிக்கு ஆதரவாக உள்ளது.

அந்த அறிக்கையில், பெண்கள் மத்தியில், ரஜினிக்கு, 50 சதவீதம் ஆதரவு உள்ளது என்றும், தஞ்சாவூர், இராமநாதபுரம் லோக்சபா தொகுதிகளில், தி.மு.க. – அ.ம.மு.க. – ரஜினி இடையே மும்முனைப்போட்டி இருக்கும் என்றும் கூறப்பட்டது.

## மும்பையில் ஊடுருவி தாக்குதல்;

# கசாப்பை அடையாளம் காட்டியவருக்கு இன்னமுமே வெகுமதி வழங்காத அரசு

மும்பை, நவ.27

மும்பையில் ஊடுருவி தாக்குதல் நடத்திய, பாக்., பயங்கரவாதிகளில் ஒருவனான, அஜ்மல் கசாபை, நீதிமன்றத்தில் அடையாளம் காட்டிய பெண், 10 ஆண்டுகள் கடந்த பின்னும், அரசு உதவி கிடைக்காமல், பரிதாப நிலையில் உள்ளார் எனக் கூறப்படுகின்றது.

கடந்த, 2008, நவ., 26 இல், மஹாராஷ்டிரா தலைநகர் மும்பை நகருக்குள், பாகிஸ்தானில் இருந்து ஊடுருவிய பயங்கரவாதிகள், நூற்றுக் கணக்கானோரை கொன்றனர். மும்பை ரயில்வே நிலையத்தில், பயங்கரவாதி அஜ்மல் கசாப் துப்பாக்கியால் சுட்டதில், 9 வயதுச் சிறுமி தேவிகா ரோதவான் காலில் குண்டு பாய்ந்து விழுந்தாள். தீவிர சிகிச்சைக்கு பின் அவள் உயிர் பிழைத்தாள்.

தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளில், அஜ்மல் கசாபை தவிர, மற்றவர்களை பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டுக் கொன்றனர். கசாப் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டபோது, நேரில் பார்த்த சாட்சியாக, ஊன்றுகோல் உதவியுடன் தட்டு தடுமாறி நடந்து சென்று தேவிகா சாட்சி கூறினாள்.

அவள் குடும்பத்திற்கு வீடு உட்பட பல உதவிகளை வழங்குவதாக அரசு தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அந்தச் சம்பவம் நடந்து 10 ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது, 19 வயதாகும் தேவிகாவுக்கு, அரசிடமிருந்து, இன்னும் எந்த உதவியும் கிடைக்கவில்லை. தேவிகா கூறுகையில், "அஜ்மல் பற்றி சாட்சி கூறியதால், பள்ளியில் சக மாணவிகளால் நான் புறக்கணிக் கப்பட்டேன். அரசு கூறிய படி, வீடு உட்பட எந்த உதவியும் அளிக்கப் படவில்லை" என்று தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது. (ஜ)



## சிறுவரை ஆபாசமாகச் சித்திரிக்கும் படங்களை வைத்திருந்தால் சிறை!

### கடும் தண்டனைக்குத் தயாராகிறது புதுடில்லி

புதுடில்லி,நவ.27

குழந்தைகள், சிறுவர்களை ஆபாசமாகச் சித்திரிக்கும் படம், வீடியோ வைத்திருந்தால் ஐந்து ஆண்டுகள் வரை சிறை தண்டனை அளிக்கும் வகையில் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

நாட்டில், சிறுவர், குழந்தைகள் தொடர்பான ஆபாச புகைப் படங்களை வணிக ரீதியாக சேமிப்பதும், விநியோகிப்பதும் மிகப் பெரிய குற்றம். இந்த விவகாரத்தில், பிரதமர் அலுவலகம் மிகவும் கவலை அடைந்துள்ளது. இதை ஒழித்துக் கட்ட, கடும் நடவடிக்கைகளை எடுப்பது குறித்துப் பிரதமர் அலுவலகம் ஆலோசித்து வருகிறது.

இந்நிலையில், குழந்தைகள் தொடர்பான ஆபாசப் படங்கள் மற்றும் வீடியோவை வைத்திருக்கும் அல்லது சேமித்து வைக்கும் நபர்களுக்கு, 'போக்சோ' சட்டத்தின் கீழ், ஐந்து ஆண்டு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கக் கூடிய வகையில், சட்ட திருத்தம் மேற்கொள்ள, மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மேலும், இந்த விவகாரத்தில் கைது செய்யப்படும் நபர்களுக்கு, பிணை வழங்கப்படமாட்டாது. இரண்டாவது முறை இதே குற்றத்தை செய்தால், சம்பந்தப்பட்ட நபருக்கு, ஏழு ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும். சமூக வலைதளமான, 'வட்ஸ் அப்'பில், குழந்தைகள் ஆபாச படங்கள், வீடியோக்கள் வைத்திருந்தால், ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும்.

இந்த ஏற்பாடுகள் தொடர்பான சட்டத் திருத்தப் பிரேரணை மத்திய சட்ட அமைச்சகம், மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இவ்விடயம் குறித்து, அடுத்த வாரத்தில், மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விபத்துக்குள்ளான விமானத்தைச் செலுத்திய இந்திய விமானியின் சடலம் மீட்கப்பட்டது

இந்தோனேசியாவில் கடந்த மாதம் 29 ஆம் திகதி கடலில் விழுந்து விபத்துக்குள்ளான லயன் எயார்லைன் விமானத்தை இயக்கிய இந்திய விமானி பாவ்யா சுனேஜாவின் உடல் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று இந்திய மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து பங்கல் பினாங் நகருக்கு லயன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் ஜேடி 610 என்ற விமானம் கடந்த ஒக்ரோபர் 29ஆம் திகதி காலை புறப்பட்டது. இந்த விமானம் போயிங் 737 மேக்ஸ் 8 வகையைச் சேர்ந்தது. லயன் எயார்லைன்ஸ் விமானத்தை இயக்கியவர் இந்திய கப்டனும், டெல்லியைச் சேர்ந்தவருமான பாவ்யே சுனேஜா ஆவார்.

விமானத்தில் பயணிகள், ஊழியர்கள் என மொத்தம் 188 பேர் பயணித்த நிலையில், விமானம் புறப்பட்ட 15 நிமிடங்களில் தகவல் தொடர்பை இழந்து கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்தவர்கள் அனைவரும் இறந்துவிட்டனர் என இந்தோனேசிய அரசு அறிவித்தது.

இந்நிலையில், விமானத்தில் பயணித்தவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடந்தது. இந்தத் தேடுதலில் விமானத்தை இயக்கிய இந்திய கப்டன் பாவ்யே சுனேஜாவின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவரின் ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கடலில் விழுந்து விபத்துக்குள்ளான லயன் ஏர்லைன்ஸ் விமானத்தை இயக்கிய இந்திய விமான பாவ்யா சுனேஜாவின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விரைவில் சுனேஜாவின் உடல், அவரின் குடும்பத்தாரிடம் இந்திய தூதரகம் மூலம் ஒப்படைக்கப்படும். சுனேஜாவின் குடும்பத்தாருக்கு என ஆழ்ந்த வருத்தங்கள் எனத் தெரிவித்தார்.

டில்லியைச் சேர்ந்த விமானி பாவ்யே சுனேஜா பைலட் பயிற்சியை முடித்து, எமிரேட்ஸ் விமானத்தில் பயிற்சி விமானியாகப் பணியாற்றியவர். அதன்பின் கடந்த 2009 ஆம் ஆண்டு பெல் ஏர் இன்டர்நேஷனல் நிறுவனத்திடம் இருந்து விமானம் ஓட்ட லைசன்ஸ் பெற்றுள்ளார்.

லயன் ஏர்லைன்ஸ் விமானத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டு சுனேஜா பணிக்கு சேர்ந்துள்ளார். ஏறக்குறைய 6 ஆயிரம் மணிநேரம் விமானத்தை இயக்கிய அனுபவம் பெற்றவர், துணை விமானி 5 ஆயிரம் மணிநேரம் விமானத்தை இயக்கிய அனுபவம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் விமானத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட கறுப்புப் பெட்டியை ஆய்வு செய்ததில் விமானத்தில் வேகம் காட்டும் கருவியில் கோளாறு ஏற்பட்டதாகவும், விமானி மற்றும் துணை விமானிக்கும் வேகம் காட்டும் கருவி வெவ்வேறு அளவுகளைக் காட்டியுள்ளதாகவும், இதுவே விமான விபத்துக்கு வழிவகுத்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக இந்தோனேசிய அரசு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.



# சிரியாவின் அலெப்போ நகரில் இரசாயனக் குண்டுத் தாக்குதல்

## 9பேர் சாவு; 20பேர் வரை காயம்

அலெப்போ,நவ.27

சிரியாவில் நடந்த இரசாயன வெடிகுண்டுத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் அதிபர் பார் அல் ஆசாத்தின் அரசுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்கள் படைகளுக்கும் இடையே கடந்த 2011ஆம் ஆண்டு தொடங்கிய உள்நாட்டுப் போர் தொடர்ந்து 7ஆவது ஆண்டாக நடந்து கொண்டு இருக்கிறது. இந்தப் போரால் குழந்தைகள் உட்பட லட்சக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். அரசுக்கு எதிராக ஐ.எஸ். தீவிரவாதிகளும் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஒழிக்க சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யப் படையினரும் வான்வழி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த சிரியாவின் அலெப்போ நகரில் இரசாயனம் நிரப்பப்பட்ட வெடிகுண்டுகளை கொண்டு தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர். இந்த தாக்குதலில் குளோரின் என்ற வேதி பொருள் பயன்படுத்தப்பட்டு உள்ளது. அதனை வெடிகுண்டுகளில் நிரப்பி தீவிரவாதிகள் வெடிக்க செய்துள்ளனர். இதனால் வெடிகுண்டு தாக்குதலுடன் பொதுமக்களுக்கு மூச்சு திணறலும் ஏற்பட்டு உயிரிழப்பினை ஏற்படுத்தியது. இதில், 9 பேர் பலியாகி உள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர்.

இதுபற்றி அலெப்போ ஆளுநர் உசைன் தியாப் செய்தியாளர்களிடம் கூறும்பொழுது, இந்த தீவிரவாத சம்பவத்தில் அதிக அளவில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த தாக்குதலால் தீவிரவாதிகளிடம் இரசாயன ஆயுதங்கள் உள்ளன என்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய 103 வயது மாது உயிரிழப்பு

நியூயோர்க்,நவ. 27

நிறவெறிக்கு எதிராக வாழ்நாள் முழுவதும் போராடிய 103 வயது மாது மரணமானார்.

அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராக சுமார் 70 வருடங்கள் போராடியவரும், 103 வயதில் அமெரிக்கக் கடலோரப்படையில் இணைந்து சாதனை படைத்த ஆப்பிரிக்க – அமெரிக்கருமான ஒலிவியா ஹுக்கர் உயிரிழந்தார்.

அமெரிக்காவில் இதுவரை நடந்த நிறவெறி கொண்ட தாக்குதல் சம்பவங்களிலேயே மோசமானதாக கருதப்படும், 300 கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்ட – 1921ஆம் ஆண்டு நடந்த – துல்சா நிகழ்விலிருந்து உயிர்தப்பித்த ஒலிவியா தொடர்ந்து கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக நிறவெறிக்கு எதிராக போராடி வந்தார்.

நீதி மற்றும் சமத்துவத்திற்காக ஓயாமல் ஒலிக்கும் குரல் என்று ஒலியாவின் செயல்பாட்டை அமெரிக்காவின் முதல் கறுப்பின அதிபரான பராக் ஒபாமா அழைத்தார்.

# உலக முஸ்லிம்கள் அனைவருமே அமெரிக்காவுக்கு எதிராக திரள்க!

## ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி அழைப்பு

தெஹ்ரான், நவ. 27

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் அமெரிக்காவுக்கு எதிராக அணி திரளவேண்டும் என்று ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அந்நாட்டின் அரசு தொலைக்காட்சி நேரலையில் பங்கேற்ற அதிபர் ஹசன் ரவ்ஹானி பேசும்போது –

அமெரிக்கா நமது மதத்திற்கும், இந்த மதத்திலுள்ள எதிர்கால தலைமுறையினருக்கும் எதிராக உள்ளது. நாம் இவர்களுக்கு எதிராக நிச்சயமான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

அமெரிக்காவுக்கு எதிராக உலக இஸ்லாமியர்கள் ஒன்றுக் கூட வேண்டும். பயங்கரவாதத்திற்கு எதிராகவும், ஆக்கிரமிப்பு மற்றும் வல்லரசுகளுக்கு எதிராகவும் சவூதி மக்களுடைய நலன்களைப் பாதுகாக்க நாங்கள் தயாராக உள்ளோம்.

அதைச் செய்ய நாங்கள் 450 பில்லியன் டொலர்களை எல்லாம் கேட்க மாட்டோம் என்று தெரிவித்தார்.

அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் கடுமையாக விமர்சித்து வந்தார்.



இந்த நிலையில் ஈரானுடனான ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியது. ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்தன.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் நவம்பர் மாதத்துக்குள் ஈரானிடம் இருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா மிரட்டல் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஓரினத் திருமணத்தை ஏற்கலாமா? தாய்வானில் பொதுவாக்கெடுப்பு

தாய்பே,நவ.27

ஓரினச் சேர்க்கையாளர் திருமணத்துக்கு சட்ட அந்தஸ்து கொடுப்பது தொடர்பாக முடிவு செய்வதற்குத் தாய்வானில் பொது வாக்கெடுப்பு நடந்தது.

ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்துக்கு சட்ட அந்தஸ்துத் தரலாம் என தாய்வான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. மேலும் இது தொடர்பாக 2 ஆண்டுகளில் நாடாளுமன்றம் சட்ட திருத்தம் செய்ய வேண்டும் அல்லது புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்றும் அந்த நீதிமன்றம் கூறியிருந்தது.

இந்த நிலையில், அங்கு நேற்று முன்தினம்



ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு வாக்களித்தனர். பொது வாக்கெடுப்பில் 10 கேள்விகளுக்கு பொது மக்களின் கருத்து கேட்கப்பட்டதந்த் தகவல்கள் கூறுகின்றன.


அதில் ஒன்று, ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்துக்குச் சட்ட அந்தஸ்து வழங்கலாமா என்பது ஆகும். ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்துக்குச் சட்ட அந்தஸ்து வழங்கும் விவகாரத்தில், அதற்கு எதிராகத்தான் பெரும்பாலான வர்கள் வாக்களிப்பார்கள் எனக் கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

ஒருவேளை ஓரினச்சேர்க்கையாளர்களின் திருமணத்துக்குச் சட்ட அந்தஸ்து வழங்கி தாய்வான் சட்டம் இயற்றினால், அவ்வாறு சட்டம் இயற்றிய முதல் ஆசிய நாடு என்ற பெயர், அந்த நாட்டுக்குக் கிடைக்கும்.

2020 ஆம் ஆண்டு டோக்கியோவில் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டியில் தாய்வான் என்ற பெயரில் பங்கேற்பதா அல்லது சைனிஷ் தாய்பே என்ற பெயரில் கலந்துகொள்வதா என்பதிலும் பொதுமக்களின் கருத்து கோரப்பட்டது. தற்போது தாய்வான், சைனீஷ் தைபே என்ற பெயரில்தான் கலந்துகொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் கப்பல்களை கைப்பற்றியது ரஷ்யா!

## தலைநகர் கிவியில் வெடித்தது போராட்டம்



கிவி, நவ. 27

கிரிமியா பிராந்தியத்தில் நின்று கொண்டிருந்த உக்ரேன் நாட்டின் மூன்று கடற்படை கப்பல்களை தாக்கி அவற்றை ரஷ்யா கைப்பற்றியுள்ளமையைத் தொடர்ந்து உக்ரைன் தலைநகர் கிவியில் ரஷ்ய தூதரகத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடந்தது.

உக்ரைன் தலைநகர் கிவியில் உள்ள ரஷ்ய தூதரகத்துக்கு வெளியே ஏறக்குறைய 150 பேர் திரண்டு இருந்தனர். அவர்கள் தீப்பந்தங்களை தூக்கி எறிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ரஷ்யா தூதரகத்துக்குச் சொந்தமான ஒரு வாகனம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

முன்னதாக, ரஷ்யா நடத்திய இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஆயுதம் தாங்கிய இரு படகுகளும் ஒரு சிறு படகும் ரஷ்யப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட கடற்படைக் கப்பல்களில் இருந்த ஏராளமான உக்ரைன் கடற்படையினர் மற்றும் பணியாளர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் பெரும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரு நாடுகளும் ஒன்றின் மீது ஒன்று பழி சுமத்தியுள்ளன.

திங்கட்கிழமையன்று தங்கள் நாட்டுக்கு என உருவாக்கப்பட்ட ஒரு பிரத்தியேக இராணுவச் சட்டம் குறித்து அந்நாட்டு எம்.பிக்கள் வாக்களிக்க உள்ளனர்.

தனது கடல் எல்லைக்குள் உக்ரேன் கப்பல்கள் சட்ட விரோதமாக நுழைந்துவிட்டன என ரஷ்யா குற்றம்சாட்ட தொடங்கியதில் இருந்து இவ்விரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினை ஆரம்பித்தது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் கெர்ச் ஜலசந்திக்கு கீழே உள்ள ஒரு பாலத்தில் தனது டாங்கர் கப்பல்களை ரஷ்யா நிலை நிறுத்தியுள்ளது.

அஸோவ் கடலுக்கு செல்லும் ஒரே பாதையாக கெர்ச் ஜலசந்தி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உக்ரைனின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பேசிய அந்நாட்டின் அதிபர் பெட்ரோ போரோஸென்கோ ரஷ்யாவின் நடவடிக்கைகளை தேவையற்றது மற்றும் பைத்தியகாரத்தனமானது என்று வர்ணித்துள்ளார்.

இந்தத் தகவலை ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹேலி உறுதி செய்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டில் ரஷ்யாவால் இணைத்து கொள்ளப்பட்டு சர்ச்சையான கிரிமியா தீபகற்பத்துக்கு அப்பால் உள்ள கருங்கடல் மற்றும் அஸோவ் கடல் பகுதிகளில் அண்மையில் பதற்றம் அதிகரித்துள்ளது. (ஐ)

# மாவீரரின் இலட்சியத்துக்காக ஒன்றுபட்டுப் பயணிப்போம்!

## சிறிதரன் எம்.பி. அறைகூவல்

மாவீரர்களின் இலட்சியத்திற்காக தமிழர்கள் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டும் என தமிழ்த்தேசிய மாவீரர் நாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. அறைகூவல் விடுத்துள்ளார். மாவீரர் தினத்தை ஒட்டி தாம் விடுத்துள்ள செய்தியிலேயே இந்த அழைப்பை அவர் விடுத்துள்ளார். அவரின் அந்தச் செய்தியின் முழு விவரம் வருமாறு:-

மாவீரர் நாள் என்பது வெறுமனே மரணித்தவர்களை நினைவு கூரும் சாதாரண நாள் அல்ல. தாயக விடுதலையை தம் உயி ரினும் மேலாக நேசித்து அந்த இலட்சியத்துக் காக போராடி மடிந்த எமது தேசத்தின்விடுதலைவீரர்களைநெஞ்சிருத்தி அஞ் சலிக்கும் புனித நாள். இந்த நாளை தியா கிகளின் திருநாளாகவும், தேசத்தின் பெரு நாளாகவும், எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகவுமே உலகெங்கிலுமுள்ள தமிழர்கள்உணர்வெழுச்சியுடன்அஞ்சலித்து வருகிறார்கள்.

தாயக தேசத்தின் விடுதலைக்காகக் களமாடி மடிந்த ஆயிரமாயிரம் புலி வீரர்களை எமது வீர மண்ணின் மார்பினைப் பிளந்து புதைத்துள்ளோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின்விதைகளாகவே இன்றும்உறங்கிக்கொண்டிருக்கிறார் கள். தமிழீழம் என்ற சுதந்திர தேசம் வரலாற்றின் குழந்தை யாக பிறப்பெடுக்க வேண்டும் என்ற பேரவாவில் ஆயிரமாயிரம் தனிமனித உயிர்கள் சரித்திரக் கருவூலத்தில் சங்கமித்தன. அவ்வுயிர்கள் அனைத்தும் கருவாகி, காலத்தால் உருவம் பெற்று, என்றோ ஒருநாள் தேசத்தின் சுதந்திரமாக வடிவம் பெற வேண்டும் என்பதே எம் ஒவ்வொருவரினதும் எதிர் பார்ப்பு. அத்தகைய சுதந்திரதேசத்தின்ஆன்மாவாகவும், ஆளுமையாகவும் மாவீரத் தெய்வங்கள் என்றென் றும் எம் மனங்களில் வாழ்வார்கள்.

எமது மண்ணில் எமது மக்கள் சுதந்திர மாக, கௌரவமாக, நிம்மதியாக வாழ வேண்டும். நாம் பிறந்து, வளர்ந்த, வாழ்ந்த மண், எமது மூதாதையர்களின் பாதச்சுவடு பதிந்த மண், எமது பண்பாட்டு வேர் ஆழப் பதிந்திருக்கும் எமது மண் எமக்கே சொந்தமாகவேண்டும்என்ற குறிக்கோளுக்காகவே மாவீரர்கள் மடிந்தார்கள். அந்நிய ஆதிக்க விலங்குகளால் கட்டுண்டு கிடந்த எமது தாயக மண்ணை தன்னாட்சி உரிமை மிக்க சுதந்திர பூமியாக மாற்ற வேண்டும் என்பது மட்டுமே புலிகள் இயக்கத்தினதும், போராளி களினதும், மாவீரர்களினதும் சத்திய இலட் சியமாய் இருந்தது.



உலகவரலாற்றில்எங்கேயும், எவராலும் நிகழ்த்தப்படாத அர்ப்பணிப்புக்களும், தியாகங் களும் இந்த மண்ணில், இந்த மண்ணுக்காகமாவீரர்களால்அரங்கேற்றப்பட்டிருக்கின்ற என்பதே ஈழவிடுதலைப் போராட்டத்தின் மிகப்பெரிய பலம். அத்தகைய வீரகாவியத்தை படைத்த மாவீரர்களின் இலட்சியக்கனவு, அவர்களின் ஆத்மதாகம் என்றோ ஒருநாள் உருப்பெறும் என்று இதயத்தின்ஏதோஓர்மூலையில்இன்னமும் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருசொட்டு நம்பிக்கைத் துளிகளினாலேயே இன்றளவும் ஒவ்வொருதமிழர்களும்வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒருநாட்டின் முழுப் படைபலத்தையும், ஆயுதபலத்தையும், தேசியவளத்தையும் ஒன்று திரட்டி பயன்படுத்தி பழைமையும், புதுமையும் வாய்ந்த எமது பாரம்பரிய பூமியை தகர்த்து, அதன் பொருள் வளத்தையும், பண்பாட்டுச் சின்னங்களையும் சிதைத்து, தமிழர்களின் தேசிய வாழ்வை சீர்குலைத்து விடுவதற்காக – புலிகள்தான் தமிழர், தமிழர்தான்புலிகள் என்றவரலாற்று உண்மையை மறந்து – புலிகளுக்கெதிராக என்றபெயரில்தமிழருக்கெதிராகவிஸ்வரூப பரிமாணம் பெற்றிருந்த இன அழிப்புப் போரில் மனித ஈகத்தின் உச்சங்களையெல்லாம் கடந்து நிற்பது மாவீரர்களின் தியாகங்களே!



விடுதலை என்பது ஓர் அக்கினிப் பிரவேசம், நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம், அது தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம் என்ற தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து விடுதலை வேள்விக்கு தமது இன்னுயிர்களை தியாகித்து, சருகாக மிதிபட்ட தமிழன் மலையாக எழுந்து நிமிர்ந்த தேசிய எழுச்சிக்கு மூச்சாகி நின்ற மாவீரச்செல்வங்களின் ஈகம் ஈழவிடுதலைக் காவியத்தின் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் நெருப்புவரிகளால் எழுதப்பட வேண்டியது.

புலிகள் எப்போதும் போரை விரும்பியவர்களோ, அகிம்சையை வெறுத்தவர்களோ அல்லர். அவர்கள் விடுதலை என்ற இலட்சியத்தை இலகுவாக தேர்ந்தெடுக்கவில்லை. வரலாறுதான் அதைக் கட்டாயமாக அவர்களிடம் கையளித்தது. சுதந்திரம் வேண்டு வதைத் தவிர வரலாறு எமக்கு வேறு வழிகள் எதனையும் விட்டுவைக்கவில்லை என்ப தைத் தமிழினத் தலைவர் பிரபாகரன் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்வ துண்டு.

ஓயாத புயலாக வீசிய ஒடுக்குமுறையின் கோரத்தாண்டவமே விடுதலைப்பாதையில்புலிகளை தள்ளிவிட்டது. இனஅழிப்பின்தாங்கமுடியாத நெருக்குவாரங் களின் காரணமாக தமது வல்லமைக்கு மிஞ்சிய வல்லாதிக்க சக்திகளை எதிர்த் தேனும் விடுதலை பெற்ற மனிதர்களாய் வாழ்வதற்கு முடிவுசெய்த புலிகளின் இலட்சிய உறுதிக்கு முன்னால் எந்தவல்லராசாலும்எழுந்துநிற்கமுடியாமல்ப் போனது என்பது வரலாற்று உண்மை.

தர்மத்தின் வழிதழுவி ஒரு சத்திய இலட்சியத்திற்காக செய்யப்படும் தியாகங்கள் ஒருபோதும் வீண்போவதில்லை. மாவீரர்களின் அளப்பரிய ஈகத்தின் ஆத்ம சக்தியே இன்றளவும் உலகம் வாழ் தமிழர்களை இயக்கிக்கொண்டிருக்கிறது. அச்சக்தியே தமிழினஅழிப்பின்மீதானஉலகத்தின்மனச்சாட்சியை உலுப்பிவிட்டிருக்கிறது. எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போக வில்லை. அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும்.

வடக்கு, கிழக்கில் இன்றுவரை நிலவும் கொடூரமான யதார்த்தப் புறநிலைகள், காணாமல் போனோரைக் கண்டறியவும், காணி விடுவிப்பு கோரியும் நிகழும் மக்களின் அகிம்சைவழிப் போராட்டங்கள், இராணுவஆக்கிரமிப்பு, ஆயுதப்படைகளின் அனர்த்தங்கள், இயல்புநிலை தோன்றாத அவலவாழ்வு, எமதுமக்கள்எதிர்கொள்ளும் அவசரமான மனிதாபிமான தேவைகள் என இவை எவையுமே ஆட்சி, அதிகார பீடங்களால் கண்டுகொள்ளப்படாத நிலையில் முடிவற்றதொரு துன்பியல் நாடகமாவே தமிழரின் அவல வாழ்வு இன்றும் தொடர்கிறது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண நாம் முயற்சிப்பதும், பேரினவாத கட்சிகள் அதை எதிர்ப்பதுமான சிங்கள அரசியல் வரலாற்று நாடகம் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக நடந்துகொண்டே இருக்கிறது. இலங்கையில் மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் இரு பெரும் சிங்கள அரசியற் கட்சிகளுமே தமிழினத்துக்கெதிரான விபரீத அரசியல் நாடகத்தின் இயக்குநர்கள். இந்த இனவாத நாடகத்தின் கதாநாயகர்கள் காலத்திற்குக் காலம் மாறியபோதும் கதையின் கருப்பொருள் மாறவேயில்லை என்பதுதான் கசப்பான உண்மை. தற்போது தென்னிலங்கையில் உருவாகியிருக்கும் அரசியல் நெருக்கடி கூட இந்த கபடநாடகத்தின் அப்பட்டமான வெளிப்பாடுதான்.

தமிழர்களைப் பகடைக்காய்களாக்கி ஆடப்பட்டுவரும் இந்த சதுரங்க விளையாட்டின் எதிர்விளைவாக அன்றுமுதல் இன்றுவரை எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக்கப்பட்டும், எத்தனையோ பேச்சுவார்த்தைகள் முறிக்கப்பட்டும், எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டும், எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப்போயும் கூட காலத்தால் மோசமாகித் தொடரும் தமிழரின் அவல வாழ்வில் இன்றுவரை அதே அரசியல் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வருகின்றமை வேதனையளிக்கிறது.

ஒடுக்குமுறையின் கொடுமைகளுக்கு ஆளாகி இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் அசைக்க முடியாது என்ற தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் சிந்தனையை உண்மையாக்கும் இன்றைய புனிதம் நிறைந்த புனிதர்களின் நாளை எமது இதயங்களில் பதித்து இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்திற்காக கொள்கைப்பற்றோடும், இலட்சிய உறுதியோடும் இறுதிவரை பயணிப்போம் என்று மாவீரத் தெய்வங்களின் மீது ஒவ்வொரு தமிழர்களும் உறுதியெடுத்துக்கொள்வோமாக!



# கனகபுரம் துயிலுமில்லமும் தயார்







கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்திலும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. இதற்காகத் துயிலும் இல்லத்தில் ஏற்பாட்டுப்பணிகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன.

2009 யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் 2016 ஆம் ஆண்டு மாவீரர் நாள் நிகழ்வுகள் வடக்கு-கிழக்கில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டும் மாவீரர் நாள் நினைவு சகல துயிலுமில்லங்களிலும் இடம்பெறவுள்ளது.

அவ்வாறே கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் அரசியல் கட்சி வேறுபாடுகளை கடந்த அனைத்துத் தரப்பினர்களும் இணைந்து மாவீரர்நாளுக்குரியபணிகளைமுன்னெடுத்துள்ளனர்.

அனைத்து தமிழ் மக்களையும் உணர்வுபூர்வமாக இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மாவீரர் பணிக்குழுச் செயலாளர் குமாரசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ)

# உணர்வுபூர்வமாகக் காட்சியளிக்கும் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லம்





முல்லைத்தீவு, நவ. 27

மாவீரர் நாளை முன்னிட்டு முல்லைத்தீவு தேவிபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் மற்றும் அலங்கார வேலைத் திட்டங்கள் நேற்று இடம்பெற்றன. துயிலுமில்லம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு உணர்வுபூர்வமாக காட்சியளிக்கிறது.

இன்று நடக்கும் மாவீரர் நாள் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வருமாறு பணிக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# இரணைப்பாலை துயிலும் இல்லம் எழுச்சிக் கோலம்










முல்லைத்தீவு, நவ. 27

மாவீரர் நாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் உள்ள இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லம் மாவீரர் நாளுக்கான எழுச்சிகோலம் பூண்டுள்ளது.

இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்ல ஏற்பாட்டுக் குழு மற்றும் பொதுமக்கள் இணைந்து வீதியைச் சிரமதானம் செய்து சிவப்பு மஞ்சள் கொடிகளால் துயிலும் இல்லத்தை அலங்கரித்துள்ளனர்.

இன்றுநடைபெறும் மாவீரர் நினைவு நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.(ஐ)

# தேராவில் துயிலும் இல்லத்தில் மாவீரர் நாள் ஏற்பாடுகள் பூர்த்தி





முல்லைத்தீவு, நவ. 27

மாவீரர் நாளினை முன்னிட்டு முல்லைத்தீவு தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் மற்றும் அலங்கார வேலைத் திட்டங்கள் துரிதகதியில் இடம்பெற்றன.

இன்று நடக்கும் மாவீரர் நாள் நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் அனைவரையும் கலந்துகொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வருமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# மூன்றாவது ரி-20 இந்தியா வெற்றி!



ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியக் கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாடுகின்றது.

இதன்படி அங்கு சென்றுள்ள இந்தியா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர், நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இந்நிலையில் இந்த சுற்றுப்பயணத்தில் முதலாவது தொடராக, ரி-20 தொடர் நடைபெறுகின்றது. இதன் முதல் ரி-20 போட்டியில் ஆஸ்ரேலியா அணி, 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இரண்டாவது ரி-20 போட்டி மழைக் காரணமாக தடைப்பட்டது. இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும், இறுதியுமான ரி-20 போட்டி நேற்று முன் தினம் நடைபெற்றது.

சிட்னியில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக ஆர்சி சோர்ட் 33 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் குர்ணல் பாண்ட்யா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

குர்ணல் பாண்ட்யாவின் இந்த பந்து வீச்சானது, இந்தியா அணியின் பந்து வீச்சாளர் ஒருவர், ஆஸ்ரேலியா அணிக் கெதிராக ரி-20 போட்டியொன்றில், அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய சந்தர்ப்பமாக பதிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியா அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இந்தியா அணி 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம், மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 1-1 என்ற கணக்கில் இந்திய அணி சமநிலைப்படுத்தியது.

இதில் இந்தியா அணி சார்பில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக விராட் கோஹ்லி, 61 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக குர்ணல் பாண்ட்யாவும், தொடரின் நாயகனாக ஷிகர் தவானும் தெரிவு செய்யப்பட்டார்.

# ஆஸ்திரேலியாவை விட நாங்கள் திறமையானவர்கள்





“ஒட்டு மொத்த திறமை என்று கணக்கிட்டால் ஆஸ்திரேலியாவைவிட இந்திய அணி திறமை வாய்ந்தது” என்று இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையே சிட்னியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடந்த மூன்றாவது மற்றும் இறுதி டி20 போட்டியில் இந்தியா வெற்றிபெற்று தொடரை 1:1 என்ற சமன் செய்தது. இந்த போட்டியின் இறுதியில் செய்தியாளர்களிடம் பேசிய கோஹ்லி இதனை தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த ஆஸ்திரேலியா 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்கள் எடுத்தது. குருனால் பாண்ட்யா 4 விக்கெட்டுக்களை எடுத்தார்.

பின்னர் துடுப்பாட்டம் செய்த இந்தியா 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 19.4 ஓவர்களில் இலக்கை எட்டியது. 41 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்த கோஹ்லியின் ஆட்டம் பெரிதும் உதவியது.

# இரசிகர்களுக்கிடையிலான மோதல் உதைபந்துப் போட்டி ஒத்திவைப்பு

பல இலட்சம் ஆர்ஜென்ரீனா உதைபந்து இரசிகர்கள், எதிர்பார்த்து காத்திருந்த பிரபலமான கோபா லிபர்டடோர்ஸ் உதைபந்துத் தொடரின், சுப்பர் கிளாசிக் என அழைக்கப்படும் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சுப்பர் கிளாசிக் என அழைக்கப்படும் போகா ஜுனியர்ஸ் மற்றும் ரிவர் பிளேட் அணிகளுக்கிடையிலான போட்டி, மோனுமண்டல் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்தது. இதன்போது ஏற்பட்ட இரசிகர்களுக்கிடையிலான மோசமான மோதலினால் இப்போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்காக போகா ஜுனியர்ஸ் அணியின் வீரர்கள், பஸ்ஸில் மைதானத்திற்கு வரும்போது, வீதியில் ஒன்று திரண்டிருந்த இரசிகர்கள், பஸ்ஸின் மீது கற்கள், போத்தல்கள் போன்ற பொருள்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.





இதனால், பஸ்ஸில் சென்ற போகா ஜுனியர்ஸ் அணியின் வீரர்கள் காயத்துக்குள்ளாகினர். இதன் பிறகு பஸ்ஸில் இருந்து அவர்களை பத்திரமாக மீட்ட பொலிஸார், வீரர்களை அவர்களது சொந்த மைதானத்திற்கு பல பாதுகாப்புடன் அழைத்துச்சென்றனர்.

இச்சம்பவத்தையடுத்து, போகா ஜுனியர்ஸ் மற்றும் ரிவர் பிளேட் அணி இரசிகர்களுக்கிடையில் மோதல் வெடித்தது. இதனைக் கட்டுப்படுத்த, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், கண்ணீர்ப் புகைகளை வீசி, இரசிகர்களைக் கட்டுப்படுத்த முயன்றனர். இதனையடுத்து பொலிஸாருக்கும் இரசிகர்களுக்கும் இடையில் மோதல் நிலை ஏற்பட்டது. இதனால் பொலிஸார் தடியடி கொடுத்து கலவரத்தில் ஈடுபட்ட இரசிகர்களைக் கைது செய்தனர்.

இவ்வாறான பதற்றமான நிலையில் போட்டி நடத்துவது உகந்தது அல்ல எனக் கூறி போட்டி அமைப்பாளர்கள், போட்டியை ஒத்திவைத்தனர்.

கடந்த நவம்பர் 11ஆம் திகதி பியூனோஸ் ஏயார்ஸ் உள்ள போகாவின் புனிதமான பாம்பனோரா மைதானத்தில் நடைபெற்ற, முதலாவது லெக் போட்டியில், போகா ஜுனியர்ஸ் மற்றும் ரிவர் பிளேட் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

அப்போது இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை கொடுத்த அப்போட்டி, 1:1 என்ற கோல், கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. இரசிகர்களுக்கிடையிலான மோதல் சுமூகமான நிலையை எட்டும் சந்தர்ப்பத்தில் இரண்டாவது லெக் போட்டி நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# என்னையும் இப்படிதான் செய்தார்கள்!



தன்னையும் நல்ல தகுதியில் இருக்கும்போதே அணியில் சேர்க்காமல் அமர வைத்தார்கள் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ண ரி-20 தொடரின் அரையிறுதிப் போட்டியில், இரண்டு அரைச்சதங்கள் விளாசிய மிதாலிராஜ் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

அந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது. இதனைத் தொடர்ந்து, மிதாலி ராஜை அணியில் இருந்து நீக்கியமை கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

மேலும் இந்த விடயம் சர்ச்சையைக் கிளப்பியுள்ள நிலையில், இது தொடர்பாக விசாரணை நடத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலி, தானும் இதேபோல் தகுதியில் இருந்தபோது அணியில் இருந்து நீக்கப்பட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், ‘மகளிர் ஒரு நாள் அணியின் கப்டன் மிதாலி ராஜ் உட்கார வைக்கப்பட்டதில் ஆச்சரியம் ஏதும் இல்லை. இது நடப்பதுதான். நானும் கப்டன் பதவிக்குப் பிறகு உட்கார வைக்கப்பட்டேன்.

“கப்டன்களை இப்படி உட்காரச் சொல்வது நடக்கிறது. அதை செய்துவிட்டு போவோம். பைசலாபாத்தில் என்னை இப்படி உட்கார வைத்தார்கள்.

“அப்போது ஒருநாள் போட்டிகளில் நான் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்தாலும், 15 மாதங்களாக நான் ஆடவே இல்லை.

“வாழ்க்கையில் இப்படியும் நடக்கும். மிகச் சிறந்தவர்களுக்கு சில வேளைகளில் கதவு காட்டப்படும். மிதாலி ராஜுக்கு முடிவு அல்ல, அவரது பயணம் இத்தோடு முடிந்துவிடாது’ என தெரிவித்துள்ளார்.

Sri Lanka Cricket

# இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய தெரிவுக்குழு நியமனம்!

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துக்கு புதிய தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

அஸந்த டி மெல் தலைமையில் புதிய கிரிக்கெட் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஊடகங்களுக்கு இது தொடர்பாக அறிக்கையொன்றை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதன்படி இந்த தெரிவுக்குழுவின் தலைவராக அஸந்த டி மெல் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், சமிந்த மெண்டிஸ், ஹேமந்த விக்ரமரத்ன, சண்டிக ஹத்துரசிங்க ஆகியோரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

## தனக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளால் தாக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர இதனை உறுதி செய்துள்ளார்.

11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கின் முக்கிய சந்தேக நபரான, கடற்படை அதிகாரி லெப்.கொமாண்டர் பிரசாத் சந்தன ஹெட்டியாராச்சிக்குக் கடற்படைத் தளம் ஒன்றில், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பாதுகாப்பு அளித்தார், தப்பிச் செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டில் விசாரணைகள் நடந்து வருகின்றன.

இந்த விசாரணைகளின் முக்கியசாட்சியானலெப்கொமாண்டர் லக்சிறி கலகமகே நேற்று முன்தினம், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மற்றும் கடற்படை அதிகாரிகளைக் கொண்ட குழுவினரால் அச்சுறுத்தப்பட்டார்.

கடற்படை உணவகத்தில் நேற்று முன் தினம் பிற்பகல், லெப்.கொமாண்டர் லக்சிறி இருந்தபோது அங்கு சென்ற அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவும் ஏனைய ஐந்து கடற்படை அதிகாரிகளும் அவரை அச்சுறுத்தியமையுடன் தாக்கவும் முற்பட்டனர்.

அவரைத் துப்பாக்கியைக் காட்டி சுட்டுவிடுவேன் என்று அச்சுறுத்தினார் எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக, கோட்டே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தம்மை அவர்கள் பிடிக்க முனைந்தனர் எனவும், எனினும் தான் தப்பி வந்து விட்டேன் என்றும், லெப்.கொமாண்டர் லக்சிறி கலகமகே முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இவர் தாக்கப்பட்டார் எனக் கடற்படை அதிகாரிகள் கூறியுள்ளபோதும், முறைப்பாட்டில் அச்சுறுத்தப்பட்டதாகவே கூறப்பட்டுள்ளது என்று பொலிஸ் கூறியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொழும்பு ரெலிகிராப் வெளியிட்டுள்ள செய்தியில்,

அட்மிரல் விஜேகுணரத்னவுக்கு எதிராகச் சாட்சியமளித்த லெப்.கொமாண்டர் லக்சிறி கலகமகே நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கடற்படைத் தலைமையக உணவகத்தில் இருந்தபோது, முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் விஜேகுணரத்ன அங்கு வந்தார்.

கடற்படைத் தலைமையகத்துக்குள் லெப். கொமாண்டர் கலகமகேயைப் பார்த்த, அட்மிரல் விஜேகுணரத்ன மோசமான மொழியில் கத்தியமையுடன், அவரை இழுத்து வருமாறும் உத்தரவிட்டார்.

அப்போது, லெப்.கொமாண்டர் கலகமகே, மோதலைத் தவிர்க்கத் தப்பி ஓடத் தொடங்கினார். அட்மிரல் விஜேகுணரத்னவின் உதவியாளர் ஒருவர் கைத்துப்பாக்கியுடன் அவரைத் துரத்தினார்.

அவர் சுட்டுவிடுவார் என்ற அச்சத்தில் துப்பாக்கியைத் தட்டிவிட்டுக் கடற்படைத் தலைமையகத்துக்கு வெளியே தப்பியோடினார்.

இந்த மோதலின்போது, லெப். கொமாண்டர் கலகமகேயின் அலைபேசி கீழே விழுந்தது. அதனை அட்மிரல் விஜேகுணரத்னவின் உதவியாளர் பறித்துக் கொண்டார். என்றுகூறப்பட்டுள்ளது.

### இன்று விசாரணை

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டு தொடர்பாக, இன்று வாக்குமூலம் அளிக்க வருமாறு அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது. (ஜ)

## பிரபாகரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவாஜிலிங்கம் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

தலைவர் பிரபாகரனின் 64 ஆவது பிறந்த நாள் நேற்று தாயகத்திலும் புலத்திலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்திலும் பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பிரபாகரனின் வீட்டுக்குச் சென்ற வல்வெட்டித்துறைப் பொலிஸார், பிறந்தநாள் ஒழுங்கமைப்பு வேலையில் ஈடுபட்டிருந்த நான்கு பேரின் அடையாள அட்டைகளைப் பறிமுதல் செய்து கொண்டு சென்றமையுடன் அவர்களை பொலிஸ் நிலையம் வருமாறு கூறியிருந்தனர். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

பின்னர் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்குக் கேக் வெட்டுவதற்காக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலர் பிரபாகரனின் வீட்டுக்குச் சென்றனர். ஆனால் அவர்களை அங்கு செல்வதற்குப் பொலிஸார் அனுமதிக்கவில்லை. அவர்களை அங்கிருந்து செல்லுமாறு பொலிஸார் விரட்டியுள்ளனர்.

இதனையடுத்து அங்கிருந்து சென்ற சிவாஜிலிங்கம் உள்ளிட்ட சிலர் தீருவில் பூங்காவில் வைத்துப் பிரபாகரனின் பிறந்த நாள் கேக் வெட்டுவதற்கு முயற்சித்துள்ளனர். அதன்போதும் அங்கு சென்ற பொலிஸார் கேக் வெட்ட முயற்சித்தமைக்காகச் சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர், உறுப்பினர் உட்பட 4 பேரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

பிறந்த நாள் கொண்டாட்டத்துக்காக சிவாஜிலிங்கம் கொண்டு சென்ற கேக் உள்ளிட்ட உடைமைகளைப் பொலிஸ் நிலையத்தில் வைத்துப் பறிமுதல் செய்த பொலிஸார் கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவித்தனர்.

பிறந்த நாள் நிகழ்வை நடத்த முடியாதென்றும் அதனால் அதற்காகக் கொண்டு செல்லப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்வதாகவும் தெரிவித்த பொலிஸார், மேலதிக நடவடிக்கைகள் தொடர்பில் பின்னர் தாம் அறிவிப்பதாகவும் கூறினர்.

இதேவேளை, பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வு வடக்கு–கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் வெளிநாடுகளிலும் விமரிசையாகக் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-07)

## யாழ்.பல்கலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக சூழலில் வாழ்த்துச் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.(ஜ 07)

## தாயகமெங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை நாட்டில் தீவிர அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டுள்ள நிலையிலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகள் தாயகமெங்கும் சிறப்புற இடம்பெறவுள்ளன.

மாவீரர் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகளுக்குத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த ஆண்டு முதல் தடவையாக வடக்கில் 13 மாவீரர் துயிலும் இல்லங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. அதேபோன்று இம்முறையும் நடைபெறும்.

போர் நிறைவடைந்த பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்கள் பலவற்றை இராணுவத்தினர் தம் வசப்படுத்தி அவற்றில் முகாம்களை அமைத்தனர். மேலும் சில துயிலும் இல்லங்கள் காடுகளாலும் பற்றைகளாலும் சூழ்ந்து கிடந்தன. அவை புனரமைக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சூழச் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு நடுவில் கொடிக்கம்பம் நடப்பட்டு இன்று அஞ்சலி நிகழ்வுகள் நடக்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உடுத்துறை, தீருவில், சாட்டி, கிளிநொச்சியில் கனகபுரம், முழங்காவில், முல்லைத்தீவில் தேராவில், முள்ளியவளை, இரணைப்பாலை, அளம்பில், வன்னி விளாங்குளம், கூழாமுறிப்பு, மன்னாரில் ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான், வவுனியாவில் ஈச்சங்குளம் ஆகிய துயிலும் இல்லங்களில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இவற்றைவிட யாழ்.பல்கலைக்கழகத்திலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தின் கட்டுப்பாடுகளிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களான கோப்பாய், கொடிகாமம், எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் நேற்றைய தினமே பூர்த்தியாகியுள்ளன. இன்று மாலை அங்கு நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மாவீரர்துயிலும் இல்லங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வுகளில் சரியாக மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு மாலை 6.05 மணிக்கு ஈகச் சுடரேற்றல் இடம்பெறும். இதன்போது மாவீரர் நாள் பாடல்களும் ஒலிக்கவிடப்படவுள்ளன என மாவீரர் தின ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை புலம்பெயர் தேசங்களிலும் இன்று மாவீரர் தின நிகழ்வுகளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் நினைவு நாளையொட்டி யாழ். குடாநாட்டில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. குடாநாட்டின் பல வீதிகளிலும் பொலிஸார் தீவிர சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஜ-07)

## யாழ் பல்கலை வளாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக வளாகத்தினுள் உள்ள மாவீரர் நினைவிடம் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினால் சீரமைக்கப்பட்டுள்ளது.

தமிழரின் எழுச்சியை வெளிப்படுத்தும் வகையில் நினைவிடத்தைச் சுற்றி வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (ஜ-07)

## விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மேலும் உறுதியையும் சுதந்திர தாகத்தையும் மேலெழுச் செய்கின்றார்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயிர் நீத்த விடுதலை வீரர்களை நினைவுகூரும் நிகழ்வுகளைப் புராதன கிரேக்கர் காலம் முதல் இன்று உலகில் இடம்பெறும் போர்க் காலங்களின்போதும் அதன் பின்னரும் காண முடியும். விடுதலை வீரர்களை நினைவுகூருவது அவரவர் சார்ந்த சமூகங்களின் கடமை.

இன்றைய மனித நாகரிகத்தின் முக்கியமான ஒரு பண்பாக இது காணப்படுகிறது. முரண்பாடுகளுக்கான தீர்வு கோட்பாடுகளிலும் போர்களில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் நினைவுகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், வடக்கு – கிழக்கில் தமிழ் மக்கள் தமது விடுதலை வீரர்களை நினைவுகூரும் உரிமைக்கு எதிராகத் தெற்கில் கடும் எதிர்ப்பு வெளியிடப்படும் துர்பாக்கிய நிலமை இன்று காணப்படுகிறது. போரில் உயிர் நீத்த தமது பிள்ளைகளைத் தாய் தந்தையர் நினைவு கூர்ந்து அழுவதையோ, தமது உடன் பிறப்புக்களைச் சகோதரங்கள் நினைவு கூர்ந்து தேற்றிக் கொள்வதையோ கூட சகித்துக் கொள்ள முடியாத தெற்கின் இழி மனோநிலையை சர்வதேசசமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

அமைதியான வழியில் உரிய வழிமுறைகளை பின்பற்றி எமது மக்கள் நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன். எமது மக்கள் சுதந்திரமாகவும் சகல உரிமைகளுடனும் வாழவேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் தமது இன்னுயிர்களை ஈகம் செய்த எமது துயில் கொள்ளும் உள்ளங்கள் எமது மக்களின் மனங்களில் எப்பொழுதுமே வாழ்ந்து கொண்டிருப்பர் – என்றுள்ளது. (ஜ)

## பாசையூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனோல்ட் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமது இன்னுயிர்களை நாம் கனவுகண்ட தமிழ்தேசியத்துக்காக ஆகுதியாக்கிய எம் மான மாவீரர்களை நினைவுகூரும் நிகழ்வு இன்று மாலை 6.00 மணியளவில் பாசையூர் கடற்கரை முன்றலில் வழமை போன்று இடம் பெறும்.

எனவே மாவீரர்களை எம் தேசத்திற்களித்த மாவீரர் குடும்பங்கள் மற்றும் மாவீரர்களது உறவுகளையும், எமது மண்ணுக்காகப் போராடிய வீரமறவர்களையும் இந்த நிகழ்வில் தங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசனங்களில் மாலை 5.00 மணிக்கு வருகை தந்து அமர்ந்து கொண்டு நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறும், இவர்களுடன் தமிழ்த் தேசியத்தின் பற்றாளர்களையும், தமிழ் பேசும் உறவுகளையும் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.

எமது தியாகப் போராட்டத்தில் எம் விடுதலைக்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வில் ஒவ்வொரு தமிழ் பேசும் உணர்வாளனும் தவறாது கலந்து கொண்டு நினைவு கூர்வதுடன், மாவீரர்களை எமக்களித்த குடும்பத்தின் நல் வாழ்வுக்காகவும் பிரார்த்திப்போமாக–என்றுள்ளது.

## இராணுவத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் தமிழர் தாயகத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது. அத்துடன், இன்று மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இராணுவம் வீதி ரோந்துகளில் ஈடுபட்டு வருகின்றது.

இராணுவத்தினர் கால் நடையாகவும் சைக்கிள்களிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுப் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவதை காண முடிந்தது.

இத்தகைய இராணுவ ரோந்து நடவடிக்கைகள் வடமராட்சி மற்றும் தென்மராட்சி மற்றும் நல்லூர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கின் முக்கிய சாட்சியான, லெப். கொமாண்டர் லக்சிறி கலகம அட்மிரல் விஜேகுணரத்னவின் முன்பாகத் தாக்கப்பட்டுள்ளார். இந்த வழக்கில் அட்மிரல் விஜேகுணரத்னவும் ஒரு முக்கிய சந்தேக நபர். ராஜபக்ஷ காலத்து பயமும், அச்சுறுத்தலும் மீண்டும் திரும்புகிறது. – என்று கூறியுள்ளார். (ஜ)

## புலிக்கொடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிப்படுத்தி சட்டவிரோதக் கூட்டத்தை நடத்தவேண்டாம் என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை வழங்கியது.

எனினும் உயிரிழந்த உறவுகளை நினைகூரக் கட்டளையில் தடை விதிக்கப்படவில்லை.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால், இலங்கை குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையின் பொதுத் தொல்லையை ஏற்படுத்தல் பிரிவின் கீழ் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை ஏற்று இந்தக் கட்டளையை நீதிமன்றம் வழங்கியது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் அவருடன் சேர்ந்த உறுப்பினர்களுக்கு இந்தக் கட்டளையை நீதிமன்றம் வழங்கியது.

வீரசிங்கம் சிறிதரன் என்பவருடைய காணியில் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றின் சின்னங்கள், கொடிகள் மற்றும் வரைபடங்கள் பயன்படுத்தப்பட்டு நிகழ்வு நடத்தப்படவுள்ளதாகப் பொலிஸாரின் புலன் விசாரணையின் அடிப்படையில் அறியப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குற்றம் இடம்பெற்றதாகப் பொலிஸாரால் குறிப்பிடப்படவில்லை.

எனவே வீரசிங்கம் சிறிதரன் மற்றும் அவர் சார்ந்தவர்கள் அந்தக் காணியில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் ஒழுங்குமுறைகள் வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கொடிகள், சின்னங்கள் மற்றும் வரைபடங்களைப் பயன்படுத்தி நிகழ்வுகளை நடத்த தடைவிதிக்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் கடந்த வெள்ளிக்கிழமை கட்டளையை வழங்கினார்.

எனினும் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு தடை விதிக்கப்படுவதாக நீதிமன்றால் எந்த உத்தரவும் விதிக்கப்படவில்லை.

இந்த நிலையில் அந்தக் கட்டளையின் எழுத்துமூலத் தடை உத்தரவைப் பொலிஸார் நேற்று மன்றில் கோரினர்.

அந்த விண்ணப்பம் மீதே யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்று மேற்கண்ட கட்டளை வழங்கப்பட்டது. (ஜ-07)

# நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான மனுக்களை விசாரிப்பதற்கு 7 நீதியரசர்களைக் கொண்ட குழாம்

## மஹிந்த தரப்பினரின் விண்ணப்பம் ஏற்பு

கொழும்பு, நவ. 27

நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்களை விசாரிப்பதற்கு, தமது தலைமையிலான ஏழு நீதியரசர்களைக் கொண்ட குழாமைப் பிரதம நீதியரசர் நளின் பெரேரா நேற்று நியமித்துள்ளார்.

இந்த மனுக்களை விசாரிப்பதற்கு ஏற்கனவே 3 நீதியரசர்களைக் கொண்ட குழாம் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மேலும் 4 நீதியரசர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீதியரசர்கள் புவனகே அலுவிகார, சிசிர டி ஆப்ரூ, விஜித் மல்கொட மற்றும் முருடு பெர்னாண்டோ ஆகிய நால்வருமே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதம நீதியரசர் நளின் பெரேரா மற்றும் நீதியரசர்கள் பிரியந்த ஜெயவர்த்தன, பிரசன்ன ஜெயவர்த்தன ஆகிய மூவர் அடங்கிய அமர்வே இந்த மனுக்களை கடந்த 12,13ஆம் திகதிகளில் விசாரித்து ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்புக்கு இடைக்காலத் தடை விதித்தது.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் சார்பிலும் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்களை விசாரணை செய்த பிரதம நீதியரசர் தலைமையிலான நீதியரசர் குழாம், நாடாளுமன்றைக் கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவை வரும் டிசெம்பர் 7ஆம் திகதிவரை இடைநிறுத்திவைக்க உத்தரவிட்டது. அத்துடன் மனுக்கள் மீதான விவாதம் வரும் டிசெம்பர் 4,5 மற்றும் 6ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று அறி வித்தது.

இந்நிலையில், மனுதாரர்களுக்குச் சவால் விடும் வகையில் இடைபுகு மனுதாரர்களாக மஹிந்த தரப்பினரான ரேமநாத் சி. டொலவத்த, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் சன்ன ஜெயசுமண ஆகிய ஐந்து பேர் இணைந்து கொண்டனர்.

உயர் நீதிமன்றில் 9 நீதியரசர்கள் தற்போது கடமையில் உள்ளதால் அனைவரையும் உள்ளடக்கிய உயர்நீதிமன்ற அமர்வே இந்த மனுக்களை விசாரிக்க வேண்டும் என்று இடைபுகு மனுதாரர்களான மஹிந்த தரப்பினர் ஐவரும் எதிர் மனுதாரரான சட்ட மா அதிபரும் உயர் நீதிமன்றில் கடந்த வாரம் விண்ணப்பம் செய்தனர்.

அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பிரதம நீதியரசர் நளின் பெரேரா, அமர்வுக்கு மேலும் 4 நீதியரசர்களை நேற்று நியமித்தார். அதனால் பிரதம நீதியரசர் தலைமையில் 7 நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் வரும் 4 ஆம் திகதி மனுக்கள் மீதான விவாதம் முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பிரதமர், அமைச்சரவைக்கு தடை கோரும் ரிட் மனுக்கள் வெள்ளிவரை ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 27

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னரும், பிரதமர் செயலகத்தை ஆக்கிரமித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவைக்கு எதிராக, 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட யாதுரிமைப் பேராணை மனுக்கள் மீதான விசாரணை வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் டிசெம்பர் 3ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

இந்த மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தன. பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டவாளர்கள் தமக்கு மனுதாரரின் அறிவித்தல் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அதனால் மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் 30 ஆம் மற்றும் டிசெ. 3ஆம் திகதிகளில் நடக்கும் என்று அறிவித்து மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு ஒத்திவைத்தது.

மனுவில் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை அமைச்சராகப் பதவி வகிப்போர், பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களாகப் பதவி வகிப்போர் என 49 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.



ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய வற்றின் 122 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனுவில் சத்தியக்கூற்று இணைத்து மனுதாரர்களாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மஹிந்த பிரதமராகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவை அமைச்சர்களாகவும் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறு மனுதாரர்களால் இடைக்கால நிவாரணமாக மனுவில் கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகஈஸ்வரன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

அதேவேளை, பேராசிரியர் சரத் விஜயசூரிய சார்பில் மற்றொரு யாதுரிமைப் பேராணை மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

(ஐ)

# மைத்திரி - மஹிந்த கூட்டுக்கு விரைவில் முடிவு கட்டுவேன்




நாடாளுமன்ற சம்பிரதாயங்களை எட்டி உதைத்துவிட்டு, அரசமைப்பை அப்பட்டமாக மீறும் வகையில் செயற்படும் மைத்திரி, மஹிந்த கூட்டணியின் பயணத்துக்கு முடிவு கட்டுவதற்காக அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயற்படத் தயார் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவித்தார்.

நிறைவேற்று அதிகாரத்தின் தாண்டவத்தால் ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் அதை பாதுகாப்பதற்காகக் கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவில் சத்தியாக்கிரகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் எனப் பலதரப்புகளும் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

போராட்டக் களத்துக்கு நேற்று விரைந்த ரணில் விக்கிரமசிங்க அங்கு உரையாற்று கையிலேயே மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாகவே இவ்வாறு நாடாளுமன்ற சம்பிரதாயத்தை எட்டி உதைத்துவிட்டு, அரசமைப்பை மீறும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அவை தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளே இருக்கின்றனர். ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வாக்களிப்புமூலம் அவர்களை தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்கு கிடைக்கின்றது. முன்கூட்டியே தேர்தல் நடத்தப்படவேண்டுமானால், கட்சித் தலை வர்களை அழைத்துப் பேச்சு நடத்தியிருக் கலாம். அவ்வாறு செய்யாமல், மக்கள் ஆணைக்கு முரணான வகையில் நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, அரசமைப்பை நாம் அனைவரும் பாதுகாக்க வேண்டும் – என்றார்.

(ஐ)

# தலைவர் பிறந்த தினம், மாவீரர் தினத்தை ஒட்டி லண்டனில் குருதிக் கொடை தொடர் நிகழ்வுகள்

லண்டன்,நவ.27

மாவீரர் தினத்தை முன்னிட்டும் தமிழ் இனத்தின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 64ஆவது அகவையைக் கொண்டாடும் முகமாகவும் பிரித்தானியாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் மாபெரும் குருதிக் கொடை தொடர் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் பிரித்தானியாவில் மாவீரர் வாரத்தில் மாவீரர்களை நினைவு கூர்ந்து குருதிக் கொடை என்ற எண்ணக்கருவில் குருதிக் கொடை நிகழ்வு வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. அந்த வகையில் இந்தத் தொடர் நிகழ்வின் ஓர் அங்கம் கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் விளையாட்டு மற்றும் சமூக நலன் பிரதி அமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கம் தலைமையில் மாபெரும் குருதிக் கொடை நிகழ்வாக




பிரித்தானியாவில் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தொடர் நிகழ்வானது –

கடந்த புதன்கிழமை 21 ஆம் திகதி காலை 8மணி முதல் பிற்பகல் 4மணிவரை Bermuda Phoenix Centre. Coventry, CV10 7HU யிலும் –

சனிக்கிழமை 24 ஆம் திகதி 9மணிமுதல் பிற்பகல் 4மணிவரை Luton Donor Centre, Luton, LU1 2NF என்னுமிடத்திலும் –

ஞாயிற்றுக்கிழமை 25 ஆம் திகதி காலை 10மணிமுதல் மாலை 5மணிவரை மூன்று இடங்களான Edgware Blood Donor Centre, Edgware, HA8 0AD;

Tooting Blood Donor Centre, London, SW17 0RB மற்றும் Norfolk House Donor Centre, Manchester, M2 1DA ஆகியவற்றிலும் மிக உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

நேற்று திங்கட்கிழமை தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த தினத்தை கொண்டாடுமுகமாக, மாபெரும் குருதிக் கொடை நிகழ்வு நேற்றுக் காலை 8.30மணிமுதல் மாலை 6.00 மணிவரை Royal College of Nursing, 20 Cavendish Square, London, W1G 0RN எனும் இடத்தில் நடைபெற்றது.

இதில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதிநிதிகள் உட்பட ஏராளமான தேசிய செயற்பாட்டாளர்களும், பொது மக்களும் இக் குருதித்தான நிகழ்வில் இணைந்துக் கொண்டனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.